# சந்தேக நபர்கள் 12 பேருக்கும் ரிமாண்ட்

Registered as a News Paper in Ceylon     விலை சதம் 15 ★ ★

**ஈழநாடு சந்தா**
(ஆள்மூலம் விநியோகம்)

| | | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|---|
| மூன்று மாதம் | ரூ. | 18-00 | 4-00 |
| ஆறு மாதம் | ரூ. | 34-00 | 7-50 |
| ஒரு வருடம் | ரூ. | 66 00 | 14-00 |

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 307
தேசிய தினசரி

**ஈழநாடு சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 22-00 | ரூ. 4-50 |
| 6 மாதம் | ரூ. 42-00 | ரூ. 8-00 |
| ஒரு வருடம் | ரூ. 82-00 | ரூ. 15-00 |

யாழ்ப்பாணம் மார்கழி 1 ஷவ்வால் 16 புதன்கிழமை (16-12-70)

## கொடிகாமச் சம்பவத்தின் எதிரொலி

மட்டுவில், செவ்வாய்
கொடிகாமத்தில் நேற்று நடந்த தாக்குதல் சம்பவத்தையொட்டி நேற்று சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 12 சந்தேகநபர்களும் இன்று சாவகச்சேரி பதில் மாஜிஸ்திரேட் கனகசபை ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களான செல்லர் சின்னர், சூசைப்பிள்ளை அரசரத்தினம், வேலு குணரத்திரன், ஆறுமுகம் சின்னத்துரை, கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி, முருகேசு பாலரத்தினம், செல்லர் செல்லத்துரை, சந்தியாப்பிள்ளை சுவாமிநாதன், வீரகத்தி வேலுப்பிள்ளை தம்பு கந்தசாமி, சின்னர் வல்லிபுரம், பொன்னுத்துரை யோகராசா ஆகியோர் நேற்றுக் காலை சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் கதிர்காமநாதனால் ஆஜர் செய்யப்பட்டனர்.

பதில் மாஜிஸ்திரேட் சந்தேக நபர்கள் 12 பேரையும் றிமாண்டில்வைக்கும்படியும் மீண்டும் இம்மாதம் 21-ம் தேதி கோர்ட்டில் ஆஜர் செய்யும்படியும் உத்தரவிட்டார்.

தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் நேற்று சிகிச்சைபெற்று வெளியேறினர்.

கொடிகாமப் பகுதியில் பொலிஸார் தொடர்ந்து ரோந்துசுற்றி வருகின்றனர் பருத்தித்துறைக்கும்; கொடிகாமத்திற்குமிடையில் வான்

(4-ம் பக்கம் பார்க்க)

2-வது கிரிக்கெட் 'டெஸ்ட்'

## ஆஸ்: 440
## இங்: 98-1

பேத், டிச 15
ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில், ஆஸ்திரேலியாவில் நடைபெறும் 2-வது கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டியின் 4-வது நாளான இன்று ஆஸ்திரேலியா தனது முதலாது இன்னிங்ஸில் மொத்தம் 440 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டி இங்கிலாந்தைவிட 43 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸிலேயே கூடுதலாகப் பெற்றுள்ளது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 397 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து தனது 2-வது இன்னிங்ஸில் கடைசியாகக் கிடைத்த செய்தியின் போது 1 விக்கெட் நஷ்டத்துக்கு 98 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## ராஜ மான்யம் ஒழிப்பு

# இந்திய ஜனாதிபதியின் உத்தரவை சுப்ரீம் கோர்ட் ரத்து செய்தது

## புதிய சட்டம் கொண்டுவர இந்திராகாந்தி உறுதி

புதுடில்லி, டிசம்பர் 15

**இந்திய மன்னர்கள் (ஜமீன்தார்கள்) அனுபவித்துவந்த உரிமைகளை ரத்துச்செய்து ஜனாதிபதி கிரி பிறப்பித்திருந்த கட்டளையை இந்திய சுப்ரீம்கோர்ட் பெரும்பான்மைத் தீர்ப்பின் மூலம் இன்று ரத்துச்செய்தது.**

**ஜனாதிபதியின் உத்தரவுக்கு முன்னர் மன்னர்கள் அனுபவித்துவந்த உரிமைகள் அவர்களுக்கு மீண்டும் வழங்கப்படவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது**

இத்தீர்ப்பு வெளிவந்தவுடன் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ...

சின்டிகேட் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அரசாங்கம் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆனால் மாஸ்கோ கம்யூனிஸ்ட், மார்க்ஸீயகம்யூனிஸ்ட் கட்சி போன்றவை உடனே ஒரு மசோதாவைக் கொண்டுவந்து மன்னர்களுக்கான சலுகைகளை ரத்துச் செய்யவேண்டுமென்று கூறினார்கள்.

சுப்ரீம்கோர்ட்டில் மாற்றங்கள் செய்யவேண்டுமென்றும், ராஜ்ய சபையை ஒழிக்கவேண்டுமென்றும் இன்னும் சிலர் வற்புறுத்தினார்கள்.

மன்னர் மான்யம் ஒழிக்கப்படவேண்டும் ... [illegible] ... சாஸனத்திற்கிணங்கசட்டம் ...

# ஏழு குழந்தைகளைப்பெற்றெடுத்தால் 'வீரத்தாய்' பதக்கம் கிடைக்கும்

## சோவியத் இளைஞர்கள் தெரிவிக்கும் தகவல்கள்

— மயிலை சிவ சண்முகதாஸன் —

யாழ்ப்பாணம், புதன்

ஏழு குழந்தைகளைப் பிரசவித்தால் சோவியத் நாட்டில் பெண்கள் வீரத் தாய்களாகப் பாராட்டப் படுகிறார்கள், தங்கப்பதக்கமும் அவர்களுக்கு கிடைக்கின்றன. நாடு முழுவதும் அரசாங்க செலவில் உல்லாசமாக சுற்றுலா போவதற்கும் வசதி கிடைக்கின்றது.

பானிய கம்யூனிஸ்ட் பத்திரிகை நிருபர் மஸாகிரோ தனக்கா ஆகியோர் நேற்று முன்தினம் ஈழநாடு அலுவலகத்திற்கு விஜயம்செய்தனர்.


திரு. வொயிற்கோ தெரிவித்ததாவது: சோவியத் யூனியனிலுள்ள எல்லாத் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின் உத்தரவுக்கு முன்னர் மன்னர்கள் அனுபவித்துவந்த உரிமைகள் அவர்களுக்கு மீண்டும் வழங்கப்படவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது

இத்தீர்ப்பு வெளிவந்தவுடன் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கருத்துத் தெரிவிக்கையில், மன்னர்களின் மான்யத்தை ஒழிக்கவேண்டும் என்ற கொள்கை அரசியல் அமைப்புக்கிணங்க சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றுவதில் அரசாங்கம் உறுதிகொண்டிருக்கின்றது என்றார்.

மன்னர்களின் உரிமைகளை ரத்துச்செய்த ஜனாதிபதியின் கட்டளை செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கும்படி மன்னர்கள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மனு



தாக்கல் செய்யப்பட்டிருந்தது இதனை 11 பேர் கொண்ட சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் குழு விசாரித்து வந்தது:

11 பேரில் 8 பேர் ஜனாதிபதியின் உத்தரவு செல்லுபடியாகாதெனத்தீர்ப்பளித்தனர். தலைமை நீதியரசர் திரு. ஹிதயத்துல்லா தமது சொந்தத் தீர்ப்பை வாசித்தார்.

ஜனாதிபதியின் உத்தரவு சட்டவிரோதமானது. அப்படி உத்தரவிடுவதற்கு அவருக்கு உரிமையில்லையென்று தலைமை நீதியரசர் கூறினார். ஜனாதிபதி எவ்வளவுதான் உரிமைபெற்றவராகஇருந்த போதிலும் அரசியல் சாஸனத்துக்கு முரணாக அவர் உத்தரவிட உரிமையில்லை என்றுதீர்ப்புக்கூறப்பட்டது.

### ராஜினமா செய்தி

சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வெளியான சில நிமிடங்களில் இதுபற்றி ஆட்சிமன்றத்தில பல அங்கத்தவர்கள் கேள்வி எழுப்பினர்கள் சுதந்திரா, ஜனசங்,



மன்னர் மான்யம் ஒழிக்கப்படவேண்டும் என்ற கொள்கையை அரசியல் சாஸனத்திற்கிணங்கசட்டம் கொண்டுவந்துநிறைவேற்றுவதில் அரசாங்கம் உறுதி கொண்டிருக்கின்றது என்று பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி கூறினர்.

ஏழு குழந்தைகளைப் பிரசவித்தால் சோவியத் நாட்டில் பெண்கள் வீரத் தாய்களாகப் பாராட்டப் படுகிறார்கள், தங்கப்பதக்கமும் அவர்களுக்கு கிடைக்கின்றன. நாடு முழுவதும் அரசாங்க செலவில் உல்லாசமாக சுற்றுலா போவதற்கும் வசதி கிடைக்கின்றது.

இத் தகவலை நேற்று ...ன் வித்தனர்.

தினம் 'ஈழநாடு' கா...லை சோவியத் நாட்டில்தொழியத்துக்கு வருகை தந்தலாளர் மத்தியில் ஆண் சோவியத் இளைஞர்கள் தெரி பெண் வித்தியாசம் கிடையாது, சம்பள வேறுபாடு இல்லை, கப்பிணிகளுக்கு விசேஷ சலுகைகள் உண்டு என்று அவர்கள் தெரிவித்தனர்.

தொழிற்சாலைகளில் தொழில் புரியும் தொழிலாளர்களில் திறமை வாய்ந்தவர்கள் சிலவேளைகளில் தங்களின் நிர்வாகிகளைவிட அதிகச் சம்பளம் பெறுகிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டனர்

சோவியத் நாட்டில் இன்றைய இளைஞர்கள் கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். சோவியத் நாடு இப்பொழுது சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள்.

சோவியத் ஊஸ்க்கஸ்தான் கொஸ்மோல் இளைஞர் கழகத்தின் உறுப்பினர் திரு. ஸ்டானிஸ்லோவ் கபிபுல்லின் தலைமையில் சோவியத் இளைஞர் குழுவொன்று இப்பொழுது இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகின்றது.

சோவியத் இளைஞர் தூதுக்குழுவின் தலைவர் ஸ்ரான்சிலாவ் கபிபுலின், ரேக்கமினியன் கூட்டுப்பண்ணைத் தலைவர் சுலாப்பேடி அனட்டேரியோவ், சோவியத் இளைஞர் அமைப்புக்குழு அங்கத்தவர் ஒபேக் வொயிற்கோ, அஹகத்தா என்னும் ஜப்...கத்திற்கு விஜயம்செய்தனர்.

திரு. வொயிற்கோ தெரிவித்ததாவது: சோவியத் யூனியனிலுள்ள எல்லாத் தொழிற் சங்கத்தவர்களும் லெனிச கம்யூனிச வாதிகளாகவே இருக்கின்றனர். இந்த இளைஞர்கள் எதிர் காலத்தில் சோவியத்தின் தலைவர்களாக மிளிர்வார்கள். சோவியத்தில் உள்ள தொழிலாளர்கள், விவசாயிகளாக 2 கோடி 70 லட்சம் மக்கள் இருக்கின்றனர். 14 வயதிலிருந்து 28 வயது வரையுள்ளவர்களே இந்த இளைஞர்கள் சோவியத் மக்கள் தொகையில் பெரும் பாலானவர்கள் இளைஞர்களே. கலாச்சார மறுமலர்ச்சி, விவசாய தொழில் மறுமலர்ச்சிக்காக விஷேட இயக்கமொன்று இங்குண்டு; ஒவ்வொரு துறையிலும் உயர்ந்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலாளியும் நாளொன்றுக்கு 7 மணி நேரம் வேலை செய்கிறார்கள். இரசாயன, எண்ணெய், எரகத் தொழிலாளர்களுக்கு சிறிது கூடுதல் சம்பளம் கிடைக்கிறது. சராசரி ஒரு தொழிலாளருக்கு 180 ரூபிளிலிருந்து 200 ரூபிள் வரை, (சுமார் ரூ. 990 - ரூ. 1100) மாதாந்தச் சம்பளமாகக் கிடைக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

கோட்டை, செவ்வாய் மாத்தறை நகரசபை கலைக்கப்பட்டது. கவனயீனம் ஒழுங்கீனம் போன்ற குற்றச் சாட்டுகளின் மீது உள்ளூராட்சி அமைச்சர் தெரிவித்தார்.

### எட்டு வருடங்களின் பின்

# ராஜாஜி-காமராஜ் சந்திப்பு

## ஜனநாயகத்தைக் காப்பாற்ற உறுதி

சென்னை, டிச.15

இந்திய முதுபெரும் ராஜதந்திரிகளில் ஒருவரான திரு. சி. ராஜகோபாலச்சாரியாரும் காங்கிரஸ் தலைவர் திரு காமராஜரும் வெகுகாலத்தின் பின்னர் இன்றுசந்தித்துப் பேசினார்கள்.

சென்னையிலுள்ள ராஜாஜியின் இல்லத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது. சுமார் 40 நிமிடம் இருவரும் மனம் விட்டுப் பேசியதாகத் தெரிகின்றது. தற்பொழுதைய அரசியல் நிலைமைபற்றி தாங்கள் விவாதித்ததாக ராஜாஜி பின்னர் தெரிவித்தார்.

இருவரின் சந்திப்பின்பின் ராஜாஜி பத்திரிகையாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவில்ஜனநாயகத்தைக் காப்பதற்குத் தாங்கள் உறுதி பூண்டிருப்பதாகச் சொன்னார். இப் பேச்சு வார்த்தை இனி நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைகளுக்கு முன்னோடியா என்று நிருபர்கள் கேட்டபொழுது. மேற்ககாண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியமில்லை என்றும், தமக்கும் காமராஜருக்குமிடையில் எவ்விதகருத்து வேறுபாடும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 8 ஆண்டுகளுக்குப் பின் இருவரும்இப்பொழுது தான் முதல் முறையாகச்சந்தித்திருக்கின்றனர்.

இருவருக்குமிடையில் அரசியல் கருத்துவேறுபாடுகள் இருந்துவந்துள்ளன. காங்கிரஸ் கட்சியை ஒழித்துக்கட்டுவதற்கென ராஜாஜி சுதந்திரக்கட்சியை நிறுவிய போது காங்கிரஸ் கட்சியின் பெருந்தூண்களில் ஒன்றாக இருந்து அதனைக்காமராஜர் காத்து வந்தார். காங்கிரஸ் இரண்டாகப்பிரிந்து போன பின்னர் இந்திராகாங்கிரஸிற்கும் இடதுசாரி இயக்கங்களுக்குமிடையில் உறவுகள் பலப்பட்டு வருவதைத் உத்தேசித்து வலதுசாரி இயககங்களுக்கிடையில் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இருதலைவர்களும் முடிவுசெய்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு இந்திய அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துமா என்பதில் அரசியல் அவதானிகள் மத்தியில் பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

### வெள்ளிக்கிரகத்தில்

## சோவியத் கலம்

மாஸ்கோ, டிச. 15

சோவியத் விஞ்ஞானிகள் வெள்ளிக்கிரகததிற்கு அனுப்பியுள்ள ஆளில்லா கலம் இன்று அந்தக் கிரகத்தின் மேற்பரப்பில் இறங்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது

2 கோடி 50 லட்சம் மைல் தொலைவை 4 மாதங்களில் கடந்துள்ள இக்கலம் வெள்ளிக்கிரகத்தில் இறங்கும் நிகழ்ச்சியை சோவியத் விஞ்ஞானிகள் ஆவலோடு ஆராய்வதற்குக் காத்திருக்கிறார்கள்

இதேசமயம் சந்திரத் தரையின் மேற்பரப்பில் கடந்த சில தினங்களாக நகர்ந்துகொண்டிருந்த சோவியத் லூனகோட்—1 இன்றும் நாளையும் ஒரே இடத்தில் நிற்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### நிதி நிலைமை படுமோசமாம்

# எம். பி. க்களின் பென்ஷன் திட்டம் ஒத்திவைப்பு

## கூட்டுத்தாபன ஊழியருக்கு இம்முறை பென்ஷன் இல்லை

கொழும்பு, செவ்வாய்

ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு பென்சன் வழங்கும் திட்டம் தறகாலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நிதிநிலைமை படுமோசமாக இருப்பதால் இதை ஒத்திவைக்கவேண்டியிருப்பதாக அரசாங்கம தெரிவித்துள்ளது.

கூட்டுத்தாபன ஊழியருக்கு வழங்கப்படும்போனஸ்ஸும் இம்முறை வழங்கப் படமாட்டாது. நேற்று நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் இம்முடிவுகள் எடுக்கப்பட்டன.

நாட்டின் நிதிநிலைமைசீரடைந்ததும் இதுபற்றி ஆலோசிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரயாணவரி

கொழும்பு, திங்கள்

இலங்கையிலிருந்து வெளிநாடு செல்பவர்களுக்கு பிரயாணவரி விதிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் இன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம் கட்டுநாயக்காவிலிருந்து புறப்படும் ஒரு பிரயாணி பிரயாணவரியாக 10 ரூபாவும் ரத்மலானை விமான நிலையத்திலிருந்து புறப்படுபவர் 5 ரூபாவும் பிரயாணவரியாக செலுத்த வேண்டும். கப்பல் துறைகளிலிருந்து புறப்படுபவர்கள் 2 ரூபா 50சதம் செலுத்த வேண்டும்.

# வர்த்தக கூட்டுத்தாபனமசோதா எதிர்ப்பின்றி நிறைவேறியது

## செனட்டிலும் ஆதரவு தருவதாக ஜே. ஆர். உறுதி

கொழும்பு, செவ்வாய்

நாட்டின் வர்த்தகத்துறையில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தும் ஸ்ரீலங்காவர்த்தகக் கூட்டுத்தாபன மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் எதுவித எதிர்ப்புமின்றி நிறைவேறியது.

இந்த மசோதா மீதான விவாதத்தில் வர்த்தக அமைச்சர் திரு ரி பி. இலங்கரத்தின பேசுகையில் இறக்குமதி வர்த்தகத்தை ஸ்ரீலங்கா வர்த்தக கூட்டுத்தாபனத் திடம் ஒப்படைப்பதால் பாவனையாளர்கள் பெரும் நன்மையடைவார்களென்றும் இறக்குமதியால் ஏற்படுகின்ற நாணய மோசடி தவிர்க்கப்படுமென்றும் சொன்னார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வர்த்தக கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் ஏற்றுமதி வர்த்தகத்தை மேற்கொள்வதினால் உலகசந்தையில் இலங்கை நல்லதோர் இடத்தைப் பெறும். இந்த மாற்றத்தின் காரணமாக சிறிய வர்த்தகர்கள் அஞ்சத் தேவையில்லை. அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இதுவரை காலமும்

(4-ம் பக்கம் பார்க்க)

# கூட்டுத்தாபன ஊழியர்கள் 60 வயதுவரை சேவை செய்யலாம்

கொழும்பு, திங்கள்

கூட்டுஸ்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களை 60 வயது வரை சேவை செய்ய அனுமதிப்பதென்று மந்திரி சபை முடிவு செய்துள்ளது.

அரசாங்க ஊழியர்களைப் போன்று, சகல கூட்டுஸ்தாபனங்களிலும் கடமையாற்றும் ஊழியர்கள் 55 வயதுடன் ஓய்வு பெறவேண்டும் என்ற திட்டத்தை மந்திரிசபை மாற்றியமைத்துள்ளது. இதன் மூலம் கூட்டுத்தாபன ஊழியர்கள் 60 வயதுவரை கடமையாற்ற முடியும்.

55 வயதுடன் ஓய்வுபெற விரும்பாமல் 60 வயதுவரை சேவைசெய்ய விரும்பும் அரசாங்க ஊழியர்கள், அரசாங்க இலாகாக்களிலிருந்து விலகி, கூட்டுத்தாபனங்களில் சேர அனுமதிப்பதென்றும் மந்திரிசபை தீர்மானித்துள்ளது. கூட்டுத்தாபனங்களில் கடமையாற்ற விரும்பும் அரசாங்க சேவையிலிருந்து விலக்கிக்கொண்டதாகக் கணிக்கப்படுவர். இவ்விதம் மாறுபவர்களுக்கு பென்சன் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிகிறது.

ஏற்கனவே அரசாங்க சேவையிலிருந்து விலகி கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் திரும்பவும் அரசாங்க சேவையில் சேர அனுமதிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

### ஜப்பானுக்கு 47 தங்கப்பதக்கம்

பாங்கொக், டிச15

பாங்கொக்கில் நடைபெறும் ஆசிய விளையாட்டு விழாவில்இதுவரை ஜப்பான் 47 தங்கப்பதக்கங்களையும் இந்தியா 5 தங்கப்பதக்கங்களையும் இலங்கை 2 தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எமது யாழ்ப்பாணக் காரியாலய உதவி மனேஜராகக் கடமையாற்ற திறமையும் பொறுப்புணர்ச்சியு முள்ள பெண் தேவை. பிணைப் பணம் ரூபா 1500/- செலுத்தவேண்டும். ஆரம்ப சம்பளமாக மாதம் ரூபா 150/- கொடுக்கப்படும். விண்ணப்பிக்க.விளம்பர இல 2570, மே/பா. 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2570

### கல்வி

வகுப்புக்கள்!

G. C. E. (Advance-Level) வகுப்புகளும் G. A. Q வகுப்புகளும் இலங்கை பட்டதாரி ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன. விபரங்கட்கு: கணக்கியல் கல்லூரி, 278&280, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2428

27-1-71ல் ஆரம்பமாகும் எங்கள் 10-வது பருவ மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பப் படிவங்களை நேரிலோ கடிதமூலமோ பெற்று 22-1-70 முன் விண்ணப்பிக்கவும். ஸ்ரீ ராஜா ஒட்டோமோபைல் என்ஜினியரிங் இன்ஸ்ரிரியூட், 11/13, ஸ்ரான்லி வீதி, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 2572

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 சித்திரம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்,

844 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

844 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-35 பெண்ணுலகம், 7-00 திரைகானம், 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-20 பேச்சு, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்தித்தொகுப்பு.

### விற்பனைக்கு

கார்!

ஈ. எல். 7265 சொமர்செட் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது டயர், பட்டரி, மை புதியது. டிசம்பர் 23-ந் திகதி 18 A, ஜானகி வீதி, பம்பலப்பிட்டியில் பார்வையிடலாம். எஸ் வீரசிங்க, கோயில் வீதி, ககபட்டா, (Kahapada) மடபாத. 2578

யாழ்ப்பாணத்தில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்புக் காணியும் விலை ஐம்பதாயிரம். கடன் வசதி கிடைக்கும் வெஸ்ட்டன்றேட்ஸ், தபால் பெட்டி-54, யாழ்ப்பாணம். 2562

## மரண அறிவித்தல்

தெல்லிப்பழை கிழக்கு காசிவிநாயகர் ஆலய பிரதம குருவும், ஓய்வு பெற்ற ஆசிரியரும், பாலர் ஞானோதய சபை ஸ்தாபகரும், தலைவரும் ஆகிய பிரமஸ்ரீ மு. சிவகடாட்சக்குருக்கள் சிவபதமடைந்துள்ளார்கள். இன்று அன்னாரது ஈமக்கிரியைகள் சமயாசாரப்படி நிறைவேற்றப்பட்டன. தகவல்: சி. கணேசலிங்கையர், தெல்லிப்பழை 15-12-70. 2577

## இராம சேவகர்கள் இடமாற்றம்

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவு காரியாதிகாரி பிரிவிலுள்ள இராம சேவையாளர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர். இவர்களின் இடமாற்றம் அடுத்த வருடம் முற்பகுதியில் அமுலாகும்.

திரு சி துரைராசா முல்லைத்தீவிலிருந்து வவனியா வடக்கு தண்டுவானுக்கும், திரு பொ திருநாவுக்கரசு கொக்குத்தொடுவாயிலிருந்து முல்லைத்தீவுக்கும். திரு ச பாலசிங்கம் வவனியா வடக்கு துண்டுவானிலிருந்து தண்ணீரூற்றுக்கும், திரு ம நல்லநாதபிள்ளை கொக்கிளாயிலிருந்து குமுளமுனைக்கும், திரு ந அருணசலம் குமுளமுனையிலிருந்து கொக்குத்தொடுவாய்க்கும், திரு செ வேலாயுதம் முள்ளியவளையிலிருந்து கொக்கிளாய்க்கும். திரு க கதிர்காமு புதுக்குடியிருப்பிலிருந்து முள்ளியவளைக்கும். திரு இ செல்லத்துரை அம்பலவன் பொக்கணையிலிருந்து வெள்ளாமுள்ளிவாய்க்காலுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முதல் தடவையாக

# ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், புதன்

வடமாகாணத்திலேயே முதன்முதலாக 'ஏழுபேர்' கொண்ட உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியொன்று அடுத்தமாதம், யாழ். விளையாட்டரங்கில் மிகக் குதூகலமாக ஆரம்பிக்கப் படவிருக்கின்றது.

இந்தப் போட்டி யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க இலாகாக்களிடையே மட்டும் நடாத்தப்படும். இப்போட்டியில் மொத்தம் பதினொரு கோஷ்டிகள் பங்கு பற்றுகின்றன. இக்கோஷ்டிகளின் விபரம் பின்வருமாறு:

தபால் இலாகா பொழுது போக்குக் கழகம், இ.போ. ச. பொழுது போக்குக் கழகம், மரவரி இலாகாக் கோஷ்டி, கச்சேரிக் கோஷ்டி யாழ். மாநகர சபை 'மறூண்' பொழுது போக்குக் கழகம், யாழ். பொலிஸ் விளையாட்டுக் கழகம், கடற்படை பொழுது போக்குக் கழகம், யாழ். மாநகரசபை 'கோல்ட்' பொழுது போக்குக் கழகம், நீர்ப்பாசன இலாகா பொழுது போக்குக் கழகம், கே. கே. எஸ். சிமெந்துக் கூட்டுஸ்தாபன பொழுது போக்குக் கழகம். சேவையர் இலாகா பொழுது போக்குக் கழகம்

இப்போட்டி, யாழ் பாவட்ட அரசாங்க இலாகா விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடனே நடாத்தப்படும். 'ஏழுபேர்' கொண்ட இந்த 'நொக்கவுட்' போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், மேற்படிச் சங்கத்தின் காரியதரிசி, திரு. ஈ. கே. குமரையா மேற்கொண்டு வருகின்றார். (தே. நி)

## இன்றைய பலன்

மார்கழி மீ 1-ந் திகதி

(16-12-70)

மேஷம்- தொழில்துறையில் வெற்றிக்கு இடமுண்டு. புதிய முயற்சிகளில் அதிக உற்சாகம் பிறக்கும், சுவையான தினம்.

ரிஷபம்-எண்ணிய கருமங்களில் வெற்றி கிடைக்கும். நீண்டநாள் தடை இன்று விலகக்கூடும், சுமுகமான நாள்.

மிதுனம்- கண்துடைப்பு வேலை நடைபெறும். கால்நடைகளினால் நஷ்டமுண்டு. மட்டமான தினம்.

கடகம்- இனப்பூசலின் மூலம் இதய பாரம் ஏற்படும். திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப் படுவீர்கள். சுமாரான தினம்.

சிம்மம்- துள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையை சோபிதமடையச் செய்யும். பாலியல் உணர்ச்சி மேலிடும். இனிப்பான தினம்.

கன்னி- பிரச்னை பல வந்து குவியும். எதிம் நல்ல முடிவை எடுக்க முடியாது திகைப்பீர்கள். இறைவழிபாடு நன்மை தரும்.

துலாம்- நீண்ட பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். தாய்வழி மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு.

விருட்சிகம்- சூதாட்டத்தின் மூலம் பெருந்தொகையை இழக்கநேரிடலாம். நண்பர்களுடன் பகைத்துக்கொள்ளுவீர்கள்.

தனுசு- பூமிப் பிணக்குகளால் வழக்குகளில் மாட்டிக்கொள்ளநேரிடும். எதிலும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

## பரிசளிப்பில் அமைச்சர் கலந்து கொள்வார்

பண்டத்தரிப்பு, செவ்

வடபகுதி கூட்டுறவுச் சங்கங்களிடையே கூட்டுறவாளர்தினத்தையொட்டி நடைபெற்ற நாடகம், பேச்சு, பாட்டு, கவிதை. வில்லுப்பாட்டு ஆகிய கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு 26-ந்திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

வடபகுதி கூட்டுறவுச்சங்க சமாசங்களின் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வரும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்ன இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிறார். திருமதி இலங்கரத்ன தபால்-தந்தி அமைச்சர் திரு குமாரசூரியர் ஆகியோரும் கலந்துகொள்வர்என்று தெரிகின்றது.

வடபகுதியில் நாடகப் போட்டியுல் முதலிடம் பெற்ற இளவாலை கன்னியர்மட ஐக்கிய பண்டகசாலை மாணவிகளின் 'என் தலையில்' என்ற கூட்டுறவு நாடகமும் இந்நிகழ்ச்சியின்போது மீண்டும் மேடையேற்றப்படவிருக்கிறது.

## 'வரிச்சுமையை எதிர்த்து போராட வேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

"கடுமையான வரிப்பளுவைவறியவர்கள்மீதுசுமத்திவிட்டு வரிகட்ட முடியாதவர்களைத் துன்புறுத்தியும், பயமுறுத்தியும்வரும் உள்ளூராட்சிமன்றங்களை எதிர்த்து நாம் போராடத் தவறிவிட்டால் கம்யூனிஸ்ட்கட்சி மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையிலிருந்து தவறிவிட்டதாக சரித்திரத்தில் இடம் பெற்றுவிடும்" என கோப்பாய் கிராம சபை நிர்வாகத்தால் விதிக்கப்பட்டிருக்கும் புதிய சோலைவரிக்குக் கண்டனம் தெரிவிக்குமுகமாக ஒழுங்குசெய்யப்பட்ட [illegible] பாலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் விசேட கூட்டத் [illegible] முறுத்தி வரிவசூல் செய்கின்றார்கள் என்றும் அதனால் மக்கள் பலவகையான சிரமங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்றும் சொன்னார்.

க. ரவீந்திரகுமார், என். சிவகுமாரன் ஆகியோரும் பேசினர்.

......

## நெற்காணி வரி அறவிட நடவடிக்கை

பருத்தித்துறை, செவ்வாய்

[illegible] ஆண்டுக்கான கால [illegible] ஏக்கர் வரி விஷயம் பற்றி ஒவ்வொரு தனிப் [illegible]

# "குழந்தை இலக்கியகர்த்தாக்களை நினைவில் கொள்க"

வெள்ளவத்தை, செவ்.

"பிரெஞ்சு எழுத்தாளர் மாப்பசான் என்பவரே முதன்முதல் சிறுகதைக்கு உருவம் சமைத்துக் கொடுத்தார். சிறுகதை தமிழில் புதியவடிவம். மாப்பசானைத் தொடர்ந்து ரஷ்யாவைச் சேர்ந்த அன்டன் செக்காவ் எழுதினர். இவர்கள் வழி வந்தவர்கள் தான் இன்றைய ஈழத்து எழுத்தாளர்கள். எங்களிடம் ஒருதனித்துவம் இருக்கிறது. பிற நாட்டு அறிஞர் ஜோன் பிலிப்ஸ்கி யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தபோது என்னை சந்தித்து எனது கதைகளைப் பற்றி அளவளாவினர். எமது ஈழத்து மண்ணின் தனித்துவத்தை அவரும் ஒப்புக்கொண்டார். வேறு நாட்டவர்களை அவதூறு செய்யும் பரம்பரையினர் நாங்களல்ல."

இவ்வாறு இலங்கை சாகித்திய மண்டல உறுப்பினரும் 'மல்லிகை' சஞ்சிகை ஆசிரியருமான திரு. டொமினிக்ஜீவா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 'கற்பகம்' சஞ்சிகை வெளியீட்டுவிழாவில் பேசுகையில் கூறினர்.

திரு. செ. இரங்கநாதன் கியூ ஸி தலைமையில் இவ்வைபவம் நடந்தது.

"ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் இனிமேல் 'நோபல்' பரிசு பெறவேண்டும்" என அவர் சொன்னார்.

ஈழத்து நாடக வளர்ச்சி பற்றி திரு. நா. சுந்தரலிங்கம் பேசுகையில், "ஈழத்தில் நூல் வடிவம் பெற்ற நாடகங்கள்மிகக் குறைவு. அ. முத்துலிங்கம், அ. ந. கந்தசாமி ஆகியோரின் நாடகங்கள் கையெழுத்துப் பிரதிகளே. அ. ந. க. வின் 'மதமாற்றம்' தமிழ் நாடகக் துறையில் ஒரு மைல்கல்லாகும்" என்றார்.

திரு. க. நவசோதி பேசுயில், "பரிசுக்காக எவரும் எழுதாதீர்கள். சாகித்திய மண்டலத்தைக் கலைத்து விடுங்கள். இந்த நாட்டில் குழந்தை இலக்கியங்கள் வளரப் பாடுபட்டவர்களை ஞாபகப் படுத்துங்கள்" என்றார்.

வழக்கறிஞர் திரு. மோதிலால் நேருபேசுகையில் "தமிழகத்திலிருந்து வரும் தரமற்ற சஞ்சிகைகளைத் தடை செய்து எமது சொந்த மண்ணில் பிறந்த எழுத்தாளர்களின் படைப்புகள் வளரவும் அவர்கள் பலனடையவும் உதவி செய்யுங்கள்" என்றார்.

திரு இ. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற "இலக்கியம் யாருக்காக" என்ற தலைப்பில் இடம்பெற்ற கவியரங்கில் கவிஞர்கள் அம்பிகைபாகன், முத்து இராசரத்தினம், வ. சிவராசசிங்கம், கல்வயல் வே. குமாரசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

'கற்பகம்' சஞ்சிகையின் முதற் பிரதியைக் கட்டிடக் கலைஞர் திரு வி.எஸ். துரைராஜா வாங்கினர்.

திரு. செ. இரங்கநாதன் கியூ. சி. வாழ்த்துகையில், 'ஈழத்து எழுத்தாளர்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடவிருக்கும் 'கற்பகம்' கற்பக தருவாக நீடித்து நிலைக்க வேண்டும்" என்றார்.

திரு. தம்பு சிவசுப்பிரமணியம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

......

## கிழக்கில் பெருமழை

மட்டக்களப்பு, செவ்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு வாரகாலமாகப் பெருமழை பெய்து வருகிறது. இப்பகுதியில் இரவு பகலாக மழை தொடர்ந்து பெய்கிறது.

மட்டக்களப்பு தென்பகுயில் ஒந்தாச்சிமடம், கோட்டைக் கல்லாறு தாம்போதிகளிலும் வடபகுதியில் மன்னம்பிட்டி தம்போதிகளிலும் வெள்ளநீர் பெருக்கெடுத்துள்ளது எனினும், கல்லாற்று தாம்போதியில் போக்குவரத்து துண்டிக்கப்படவில்லை.

## ஒன்றுசேர்ந்து நிலைமையை ஆராய்வர்

கோட்டை, செவ்

வர்த்தகம், விவசாயம், கைத்தொழில், நிதி ஆகிய நான்கு அமைச்சுகளும் ஒன்றுக்கொன்றுநெருங்கி, தமது நடவடிக்கைகளை ஒருமுகப்பட்டுச்செய்யவேண்டுமென பிரதமர் திருமதி பண்டாரநாயகா உத்தரவிட்டதைத் தொடர்ந்து, நிதியமைச்சர் டாக்டர் என்.எம் பெரேரா உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகஅமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன, கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா, [illegible]ணி. விவசாய அமைச்சர் திரு. கொப்பேகடுவ ஆகியோர் அடிக்கடி கூடி நிலைமைகளை ஆராய்வதற்கு முடிவுசெய்துள்ளனர்.

......

## புராணப் படிப்பு

யாழ்ப்பாணம், செவ்

மூன்று மாத காலம் தொடர்ந்து நடைபெற்று வந்த தெருவாரவீதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோவில் கந்தபுராணப்படிப்பு வள்ளியம்மன் கலியாணப்படிப்புடன் பூர்த்தியாகியுள்ளது.

கல்வயல் திரு. தா. குருசர்மி, புலவர் ஆறுமுகம்கணபதிப்பிள்ளை, கு. வி. மகாலிங்கம் உட்படப்பலர் படிப்பில் கலந்துகொண்டார்கள். (கு. வி. ம)

......

## இந்திய அறிஞர்

கோட்டை, செவ்

புதுடில்லி தேசியபொருட்காட்சிசாலையின் முன்னுள் அதிபர் டாக்டர் சி. சிவமூர்த்தி கொழும்பு தேசிய பொருட் காட்சிச்சாலையில் உள்ள நடராசமூர்த்தி சிலைகளை ஆராய்வதற்காக நேற்று இங்குவந்துள்ளார். இவர் நாளை கொழும்பு பொருட்காட்சிச் சாலையின் கருத்தரங்கு மண்டபத்தில் தென்னிந்திய சிலைகள் என்ற பொருள்பற்றி உரையாற்றுவார்.

நத்தார் புதுவருட மலிவு விற்பனைக்காக
புதிதாக வரவழைக்கப்பட்ட
J. B. பூப்போட்ட நைலெக்ஸ் சேலைகள்
அநேகநிறங்களில் வ. வி. 72-50 — ம. வி. 69/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைகானம்,7-15சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-20 பேச்சு,9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்தித்தொகுப்பு.

முள்ளியவளைக்கும். திரு இ செல்லத்துரை அம்பலவன் பொக்கணையிலிருந்து வெள்ளா முள்ளிவாய்க்காலுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த

# மாட்டுக்கார வேலன்

யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ ராஜன் ★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி
★ நிர்மலா
★ நாகேஷ்
நடித்த

# ஏன்?

கெப்பிட்டல் பிளாஸா மைலன் திரைகளிலும்

யாழ். வெலிங்டன்

திரையிலும்

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30, போயா நாட்கள் காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்‌ஷனில் உருவாகி



மக்கள் திலகம்

எம். ஜி. ஆர்.

ஜெயலலிதா

வாணிஸ்ரீ

முத்துராமன்

அசோகன், சோ,

ஓ. ஏ. கே. தேவர்

மற்றும்பலர் நடித்த

சத்யா மூவிஸ்



# கண்ணன் என் காதலன்

தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


லாம். நண்பர்களுடன் வி... பகைத்துக்கொள்ளுவீர்கள்.

தனுசு- பூமிப் பிணக்குகளால் வழக்குகளில் மாட்டிக்கொள்ளநேரிடும். எதிலும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

மகரம்- உள்ளத்தில் உவகைக்கூத்து உறவினர்கள் வருகை வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும். இன்று பொன்னுன்.

கும்பம்- தொழில்துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு, புதிய முதலீடு ஒத்திவைக்கவும். மனத்திடம்வேண்டும்.

மீனம்- நினைத்த காரியத்தில் வெற்றி உண்டு, எதிர்பாராதவகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும். சிறப்பான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
## படகோட்டி

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சிவாஜி -- சரோஜாதேவி
நடித்த
## புதியபறவை

RAJAH
(Jaffna)
Daily at 4-45, 7-00
and 9-45 p. m.
Mike Henry
in
TARZAN AND THE JUNGLE BOY
(Scope-color)

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 &9-45 p.m.
Stanley Kramer's
Presents
'IT'S A MAD, MAD, MAD, MAD WORLD
(It's a best comedy film)

REGAL
Jaffna
Daily 4-45,7&9-45p.m.
Poya days 4 shows
Dick Van Dyke
in
DIVORCE AMERICAN STYLE


வாய் கிராம சபை நிர்வாகத்தால் விதிக்கப்பட்டிருக்கும் புதி[illegible] சோலைவரிக்குக் கண்டனம் தெரிவிக்குமுகமாக ஒழுங்குசெய்யப்பட்ட இருபாலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் விசேட கூட்டத்தில் திரு. வி. அரியரத்தினம் கூ[illegible]ர்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது! நாம் வரியை எதிர்க்கவில்லை. வரி விகிதத்தையே எதிர்க்கிருேம். கிராம சபை பணம் வசூல் செய்யாமல் மக்களுக்குகொடுக்கும் சேவைகளின் செலவை ஈடுகொடுக்கவே இந்த சோலைவரி கொண்டுவரப்பட்டது. மலம் அகற்றல் சேவைக்கு தனியாக பணம் வசூல் செய்கிருர்கள். தெருக்கள் சுத்தி செய்யும் சேவை நடைபெறுவதே இல்லை. முக்கியமான ஒழுங்கைகளுக்கெல்லாம் மின்சார விளக்குகள் போடப்படவில்லை''

திரு. பி. பரமநாதன் பேசுகையில், வரிவசூல் செய்பவர்கள் விடுகளுள் அத்துமீறி புகுந்து மக்களைப் பய

## 'சேவை நீடிப்பு அளிக்கவேண்டும்'

பருத்தித்துறை, செவ்

'55 வயது வந்த சகல அதிபர்களுக்கும் கட்டாய ஓய்வு என்னும் நிர்வாக விதியை கல்விக் கோணத்திலிருந்து அணுக வேண்டும். நிர்வாகத் திறமை, கல்வித் தகைமை, போதிக்கும் ஆற்றல் பரீட்சைப் பெறுபேறுகள் என்னும் உரைகற்களையும் உபயோகித்து நல்ல முடிவுக்கு வருவதே சிறந்தது. இவ்வித அடிப்படையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. க சிவசிதம்பரத்தின் சேவையை ஓராண்டு காலத்துக்காவது நீடிக்குமாறு வேண்டுகிருேம்.

இவ்வித தீர்மானம் ஒன்றை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மக்கள் குழு நேற்று முன்தினம் நிறைவேற்றி கல்வியமைச்சருக்கு அனுப்பியுள்ளது. அதில் மேலும் அக்குழு குறிப்பிட்டுள்ளதாவது'

'புதிய கல்வித்திட்டங்கள் உருவாகிவரும் இன்றைய காலகட்டத்தில் கல்வித்துறை நிர்வாக அனுபவமுடையவர்களின் சேவையைச் சமுதாயம் பயன்படுத்தச் சந்தர்ப்பமளிக்க வேண்டும் புதிய திட்டங்கள் ஓரளவாவது நிரந்தரத் தன்மையடையும் வரையாவது இவ்வித அதிபர்கள் தொடர்ந்து சேவையில் இருக்க அனுமதிக்க வேண்டியது அவசியம்.'

## நடவடிக்கை

பருத்தித்துறை, செவ்வாய்

இவ்வாண்டுக்கான காலபோக ஏக்கர் வரி விஷயம் பற்றி ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தவருக்கும் அவ்வப் பயிர்ச் செய்கைக் குழுக் காரியதரிசி மூலம் அனுப்பி இம்மாத இறுதிக்குள் வசூலிக்கவேண்டுமென வடமராட்சி பயிர்ச் செய்கைக்குழுக்களின் சமாச நிர்வாகசபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அக்கடிதங்களின் பிரதிகளின் பிரதிகள் கிராமாந்தரக் கோர்ட் நீதிபதிகளுக்கும் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். டி. சம்பந்தமூர்த்தி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நெற்பயிர், உப உணவு விருத்திக்கான வகைகளைக் கையாளுவது பற்றியும், அவற்றைச் சந்தைப்படுத்தல் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிக விரைவில் கமநலச் சேவை விழா நடாத்துவது பற்றியும் அதில் இடம் பெறவேண்டிய நிகழ்ச்சிகள் பற்றியும் ஆராயப்பட்டது.

## மண்வெட்டி தட்டுப்பாடு

அம்பாறை, செவ்

அம்பாறைப் பகுதியில் மண்வெட்டிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இப்பகுதி விவசாயிகள்பெரிதும் கஷ்டப்படுகிருர்கள்.

சில கடைகளில்கிடைக்கக்கூடிய ஒருசில மண்வெட்டிகளுக்கும்வியாபாரிகள்கூடிய விலைகளை அதாவது ஒன்று 40 ருபாவுக்குமேல் கூறுவதால் தொழிலாளர்கள் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைச் செலுத்த முடியாது கஷ்டப்படுகிருர்கள்.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராமசபைப் பகுதியில் கடமையாற்றி இடமாற்றம் செய்யப்பட்டுச் செல்லும் எல்லா அரசாங்க உத்தியோகஸ்த்தர்களுக்கும் பிரிவுபசாரம் அளித்துக் கௌரவிக்க சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி தலைமையில் ஓர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தபால் அதிபர், வைத்திய அதிகாரி, சுகாதார பரிசோதகர்,விளையாட்டு அதிகாரி, கிராம சேவையாளர் முதலிய ஐந்துக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.


புதிதாக வரவழைக்கப்பட்ட
J. B. பூப்போட்ட நைலெக்ஸ் சேலைகள்
அநேகடிசைன்களில் வ. வி, 72-50 — ம. வி, 69/-

# டயரும்ஸ்

54 - 60, பிரதான வீதி — யாழ்ப்பாணம்.

விற்பனையாகின்றது

## 'ஈழநாடு' தினக்குறிப்பு 1971

முற்றிலும் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

60 பக்கங்கள் கொண்ட தகவல்கள்

★ அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகள்
★ போயா விடுமுறைகள்
★ பாடசாலை தவணை விடுமுறைகள்
★ உலக - இலங்கை புவியியல், குடியியல், சரித்திரம் சம்பந்தமான குறிப்புகள்
★ தபால் தந்தி விகிதங்கள்
★ பஸ், புகையிரத, விமான சேவை நேர அட்டவணை
★ கிரகங்களின் அட்டவணை

[ இன்னும் பல குறிப்புகள் ]

விலை: ஒன்று 1 ரூ. 50 சதம்
வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

'ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)
த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பெயினில் அவசரகால நிலைமை பிரகடனம்

## தனியார் சுதந்திரத்திற்குத் தடை

### பொலிஸாருக்கு அதிக அதிகாரம்

மாட்றிட், (ஸ்பெயின்) டிசம்பர், 15

இஸ்பெயினில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பொலிசாருக்கு அதிகாரம் மிகக் கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதிலும் ஏற்பட்ட மக்கள் எதிர்ப்பியக்கம் காரணமாக ஒருமணிநேர மந்திராலோசனையின் பின்ஜெனரல்பிராங்கோஇவ்வுத்தரவைப் பிறப்பித்தார் இதன்படி ஆறுமாசத்திற்கு தனிமனிதஉரிமைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. பொலிசாருக்குக்கட்டுக் கடங்கா உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. எவரையும் எவ்வித ஆதாரமுமின்றி கைது செய்வதற்கும் காவலில் வைப்பதற்கும் பொலிசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில்இருந்தமேற்கு ஜெர்மன்இராஜதந்திரிகடத்திச்செல்லப்பட்டார். காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ள தீவிரவாதிகள் 16 பேரும் விடுவிக்க வேண்டுமென்று கோரி தீவிரவாதிகள் நிபந்தனை விதித்துள்ளனர். இவர்களை விடுதலைசெய்யக்கோரி நாடுமுழுவதும் எதிர்ப்பியக்கங்கள் நடைபெற்றன. இந்த எதிர்ப்பியக்கங்களைக் கட்டுப்படுத்த பொலிசாருக்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் இப்பொழுது அளிக்கப்பட்டுள்ளன. இதனால் பொலிசார் எவ்வித வாரண்டுகளுமின்றி தாங்கள் சந்தேகப்படுவோரை எல்லாம்கைது செய்ய அதிகாரம் இருக்கின்றது.

தீவிரவாதிகளுக்கு எதிராக தீர்ப்பு அளிக்கப்பட்டால் கடத்தப்பட்டமேற்கு ஜெர்மனி ராஜதந்திரிகொல்லப்படுவார்எனபாஸ்க்இயக்கத்தினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனி ராஜதந்திரியை கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும், சந்தேகத்திற்குரிய இடங்களைச் சோதனையிடுவதாகவும் தெரியவருகிறது

## புத்தகக் கண்காட்சி

கொழும்பு,செவ்

இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தின்வருடாந்த மநாட்டை முன்னிட்டு வழமைபோன்று பிரிட்டிஷ் கவுன்சிலின் புத்தகக் கண்காட்சியும் இடம் பெறவிருக்கிறது. இக்கண்காட்சி கொழும்பு சர்வகலாசாலையின் கலைப் போதனபீடத்தில் இடம்பெறும் 600 நூல்களையும் 250 சஞ்சிகைகளையும் கொண்ட இக்கண்காட்சி இன்று தொடக்கம் 19ந்திகதிவரை காலை 8மணியிலிருந்து மாலை5மணிவரை நடைபெறும்.

இக்கண்காட்சியில் இடம்பெறவிருக்கும் பெரும்பாலான நூல்கள் வைத்திய விஞ்ஞானத்தைச் சார்ந்தவை பொறியியல் உலோகவியல், கட்டிடக்கலை,ரசாயனம், பௌதிகம், கணிதம் மற்றும் தொழில்நுட்பத்துறைகளைச் சார்ந்த புதிய நூல்களும் இங்கு இடம்பெறும்.

## சோவியத் பட்ஜட்

மாஸ்கோ, டிச. 15

1971-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சோவியத் பாராளுமன்றம் நிறைவேற்றியது.

அடுத்த ஆண்டு வரவு 160,971,463,000 ரூபிள் ஆகும். செலவு 160,770,966,000 ரூபிள் ஆகும்.

பொருளாதார அபிவிருத்திக்கு 7,700 கோடி ரூபிளும், சமூக-கலாச்சார வளர்ச்சிக்கு 5,850 கோடி ரூபிளும் பாதுகாப்புக்கு 1,790 கோடி ரூபிளும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தொண்டர் நிறுவனம் மூலிகை சேகரிக்கும்

கோட்டை, செவ்

ஊவா பகுதியில் உள்ள தொண்டர் நிறுவனம்ஒன்று ஆயுர்வேதகூட்டுஸ்தாபனத்திற்கு ஆயுர்வேத மூலிகைகளைச்சேகரித்துவழங்கவிருக்கின்றது.

ஊவா காட்டுப் பகுதியில் ஏராளமான ஆயுர்வேத மருந்துற்பத்திக்கான மூலிகைகள் காணப்படுகிறதெனத் தெரியவருகிறது. இம்மூலிகைகளை தொண்டர்கள் சேகரித்துவழங்குவதால் கூட்டுஸ்தாபனத்துக்கு நன்மைசேற்படுவது மட்டுமன்றி இப்பகுதியில் உள்ள அநேக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

## ரொடீசியப்பிரதமர்மகனுக்கு பாஸ்போட் வழங்க மறுப்பு

லண்டன், டிச 15

ரொடீசியப் பிரதமர் திரு. அயன் சிமித்தின் மகன் பிரிட்டிஷ் பாஸ்போட்டுக்கு விண்ணப்பித்த மனுவை பிரிட்டிஷ் அரசாங்கம் நிராகரித்துவிட்டது. மாணவரான அலெக்சிமித்திற்கு 21 வயது. இவர் சென்ற மாதம் இவ்விண்ணப்பத்தை விண்ணப்பித்திருந்தார்.

எனது தந்தை பிரிட்டனுடனான ரொடீசியாவின் உறவை முறித்துக்கொண்டதனால் நான் பாஸ்போட் பெறுவதில் நீதியீனம் நடைபெறுமென நினைக்கவில்லை என பத்திரிகைகளுக்கு விடுத்தசெய்தியில் அவர் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் பிரஜை அல்லாத ரொடீசியருக்கு பாஸ்போட் அளிப்பதற்கான காரணங்கள் இல்லாத காரணத்தால், குறுகிய காலத்துக்குரிய பிரிட்டிஷ் பாஸ்போட் வழங்க பிரிட்டன் மறுத்ததாக வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 1968-ம் ஆண்டு குறுகியகால பிரிட்டிஷ் பாஸ்போட் ஐந்துகாரணங்களுக்காகவே ரொடீசியாவில் வாழ்பவர்க்கு அளிக்கப்படவேண்டுமென பிரிட்டிஷ் ஆட்சிமன்றம் முடிவுசெய்தது. அரசியல் அடைக்கலம் பிரிட்டிஷ் பாஸ்போர்ட் வைத்திருப்போர் பிரிட்டிஷ் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் இடம் பெறும் மாணவர் போன்ற காரணங்களுக்காகவே இவ்வித பாஸ்போர்ட்டுக்கள் கொடுக்கப்படுமெனக் கூறினார்.

## பிரி.பத்திரிகைகவுன்சில்பற்றி அறிய இலங்கை ஆர்வம்

லண்டன், டிச 15

பத்திரிகைக் கவுன்சில் ஒன்றை நிறுவ இலங்கை உத்தேசித்திருப்பதாகவும் பிரிட்டிஷ் பத்திரிகைக் கவுன்சிலின் அமைப்பையும் அனுபவத்தையும் அறிந்துகொள்வதில் இலங்கை பெரிதும் அக்கறைகொண்டிருப்பதாகவும் இலங்கைத் தகவல் இலாகா அதிபரான திரு சரத் அமுனுகம லண்டனில் கூறினார். திரு அமுனுகம கடந்த 10 தினங்களாக பிரிட்டனைச் சுற்றிப்பார்வையிட்டபோது பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனங்களின் அமைப்புப் பற்றியும், பிரிட்டிஷ் பத்திரிகைக் கவுன்சிலின் செயல்முறை பற்றியும் படித்தறிந்தார்.

'இலங்கையில் நாம் ஒரு செய்தி ஸ்தாபனத்தை நிறுவும்போது பிரிட்டனின் அனுபவம் எமக்குப் பயனளிக்கும். பத்திரிகை சங்க நிர்வாக அதிபர்களுடன் இவ்விடயம் குறித்து நான் பயன்மிக்க பேச்சுக்களை நடத்தினேன்'' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

விஸ்தரிப்படைந்து வரும் இலங்கைத் தகவல் சேவைகளை புனரமைப்புச் செய்வதில் திரு. அமுனுகம பெரும் ...

மக்கள் சபையை பார்வையிட்ட அவர் பாராளுமன்ற அங்கத்தவர்களுடன் மதிய போசன விருந்துண்டார். கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையையும் அவர் சுற்றிப் பார்வையிட்டார்.

## நிதிசேர்க்கத் தீர்மானம்

கோட்டை, செவ்.

'அகில இலங்கையிலும் உடனடியாக ஒரு இலட்சம் ரூபாவை நிதியாகத் திரட்ட சகலரின் ஒத்துழைப்பையும் அகில இலங்கை இந்து மாமன்றம் கோருகின்றது'

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இம்மாதம் 12-ம் திகதி மன்ற உப தலைவர் திரு. ச. சோமசுந்தரம் தலைமையில் கூடிய அகில இலங்கை இந்து மாமன்றச் செயற்குழுக் கூட்டம் மேற்கண்டவாறு தீர்மானித்தது.

கொழும்பு சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையில் அரசாங்கம் வழங்கிய 40 பேர்ச் காணியில் அகில இலங்கை இந்துமாமன்றம் கலாச்சார நிலையத்திற்குச் சம்பத்தில் அத்திபாரமிட்டு கட்டிடத்திற்கு பணம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடின்பரோ கோமகனிடம் பரிசுபெறும் 1000 இளைஞர்கள்

லண்டன், டிச. 15

எடின்பரோ கோமகனின் பரிசுத் திட்டத்தின்கீழ் இம்முறை உலகடங்கிலுமிருந்து 1000 இளைஞர்கள் பரிசு பெறவிருக்கிறார்கள். பக்கிங்ஹாம் மாளிகைக்கு அழைக்கப்பட்டிருக்கும் இவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும்.

இம்மாதம் 16-ந் திகதி கோலாகலமான முறையில் இப்பரிசளிப்புவிழா பக்கிங்ஹாம் மாளிகையில் நடைபெறும். 1956- ஆண்டு தொடங்கிய இத்திட்டம் சமூக சேவையிலும், தீரச் செயல்களிலும் பயமிக்க இலட்சியங்களிலும் ஈடுபடும் இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

இங்கிலாந்திலிருந்து நெதர்லாந்து வரை சைக்கிளில் சென்று சாதனையீட்டிய 18வயது யுவதி தொடங்கி, லிபியா பாலைவனத்தில் பூகோள அளவை ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஒரு வலதுகுறைந்த இளைஞன்வரை பல்வேறு சாதனைகள் புரிந்த இளைஞர்களுக்கு பிலிப் இளவரசர் பரிசுகளை வழங்குவார்.

## "காலிவீடுகளை ஊழியருக்கு தருக"

பருத்தித்துறை, செவ்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்குச் சொந்தமான வீடுகள் சில கடந்த பல மாதங்களாகக் காலியாகக் கிடக்கின்றன என்றும் அவற்றில் உடனடியாகத் தொழிற்சாலை ஊழியர் தங்கள் குடும்பங்களுடன் வாழ அனுமதியளிக்கும்படியும், பிரஸ்தாப தொழிற்சாலைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் கூட்டுத்தாபனத் தலைவருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது'

தொழிற்சங்கக் காரியாலயத்திற்கு வேண்டிய தளபாடங்களையும் தந்துதவுமாறும் அது கோரியுள்ளது.

## கட்டாக்காலிகள் பயிரை அழிக்கின்றன

சுழிபுரம், செவ்.

பொன்னாலை வயல்களிலுள்ள நெற்பயிர்களை கட்டாக்காலிகள் பகல் வேளையில் அழித்து வருகின்றன. பல நூற்றுக்கணக்கான ரூபா ...

## இன்னும் சிறிது காலத்தில் மத்தியதரைக்கடல் 'செத்து' விடுமாம்

### விஞ்ஞானிகள் கவலை

ரோம், டிச.15

மத்தியதரைக்கடல் நச்சுப்படுத்தப்படும் வேகம் தொடர்ந்து நிலவும்பட்சத்தில் இரண்டு அல்லதுமூன்று தலைமுறையினர் காலத்தில் மத்தியதரைக்கடல்'செத்து' விடும் அதாவது அதில் மீனினங்கள் உயிர்வாழமுடியாது போய்விடும்; சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் உயிருக்கு ஆபத்து விளையும்.

மேற்கண்டவாறு ரோமில் நடைபெற்ற மத்தியதரைக் கடலை விஞ்ஞான ரீதியாக ஆராய்வதற்கான சர்வதேச கமிஷனில் 22-வது மகாநாட்டில் கூடிய 300 விஞ்ஞானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

பிரபல சமுத்திரவியலாளரும், மேற்படிவிஞ்ஞானக் கமிஷனின் பொதுச்செயலாளருமானஜகுவேஸ் ஙெஷஸ்டியூ மத்தியதரைக்கடலில் பதிந்துள்ளநச்சு ஆபத்தான அளவுக்கு பெருகியிருப்பதாகக் கூறினர்.

1920-ம் ஆண்டுக்குப் பின்னர் 300 மீட்டர் ஆழத்தில் நீரில் கலந்துள்ள காரீயத்தின் அளவு ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது.

பல்வேறுரக மீன்கள் மறைந்தும் மரித்தும் விட்டன.

பிரெஞ்சுக் கரையிலிருந்து 40 கிலோமீட்டர் தூரத்துக்கு கடலில்அணு தொழிற்சாலைகளிலிருந்து ரோன் நதிவழியாக வரும் கழிவுப் பொருட்கள் மத்தியதரைக் கடலைநச்சுப்படுத்துகின்றன.

கடல்நடுவே கரைக்குப்பக்கத்தில் நூற்றுக்கணக்கான கப்பல்கள் தாங்கிகளை சுத்தப்படுத்துவதும் ஆபத்தாக உள்ளது.

'கடலுக்கு ஆபத்துஏற்பட்டுள்ளது. இதுமனித குலத்துக்கு ஆபத்து ஏனென்றால் இயற்கை வழங்கும் நீரின் சுத்தத்தில் மண்ணின் உயிர் தங்கியுள்ளது' என்று அவர் கூறுகிறார்.

## இன்றைய வாலிபர் பற்றி இன்ஸ்பெக்டர் கவலை

மாவிட்டபுரம், செவ்

'இன்றைய வாலிபர்கள் சமுதாயத்தின் முன்னேற்றத்தையோ தமது வருங்கால வாழ்வையோ கருத்திற் கொள்ளாது அனாவசியமான வேலைகளில் ஈடுபடுவதால் சமுதாயம் சீர்கெட ஏதுவாகிறது. ஆகவே வாலிபர்கள் அனைவரும் இதை உணர்ந்து செயல்பட வேண்டும்.'

இவ்வாறு சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். எஸ். நவரத்தினராசா அளவெட்டி வடக்கு கலாசேவா சனசமூக நிலையத்தில் நடந்த கருத்தரங்கில் கூறினார்.

அண்மையில் இங்கு பதவி ஏற்றுவந்த இன்ஸ்பெக்டர் நவரத்தினராசா தமது பொலிஸ்நிலைய எல்லைக்குள் உள்ள கிராமங்களில் வன்முறைச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க கிராமந்தோறும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறார்.

இதற்கமைய அளவெட்டியில் நடத்தப்பட்ட இக் கருத்தரங்குக்கு திரு. த. ஸ்ரீகாந்தன் தலைமை வகித்தார்.

திரு. நவரத்தினராசா தொடர்ந்து பேசுகையில்-

பொலிசார் பொதுமக்களின் விரோதிகளல்லர். பொதுமக்களின் ஊழியர்களே பொலிசார்? இந்த உண்மையை மக்கள் தெளிவாக உணர்ந்து பொலிசாருடன் நல்லுறவு பூண வேண்டும்.

சமுதாய முன்னேற்றத்தையோ, தமது வருங்காலத்தையோ தற்போதைய வாலிபர்கள் கருதாது வீதிகளில் கூடிநின்று தமக்கும் சகோதரிகள் இருக்கிறார்கள் என்பதை மறந்து வீதியில் செல்லும் பெண்களைக் கேலி செய்கின்றனர். முதியவர்களைக் கண்டவுடன் அவர்களின் முதுமையைக் கேலி செய்கின்றனர். தாமும் முதுமையடைவோம் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். இவ்விடயத்தில் பொலிசார் மிக கண்டிப்பாக நடப்பார்கள். குற்றம் புரிவோர் சுலபத்தில் தப்ப முடியாது.

# போர்த்துக்கல் காலனிகளுக்கு சுதந்திரம் அளிக்க வலியுறுத்து

### ஐ. நா. மகாசபை தீர்மானம்

நியுயோர்க், டிசம்பர் 15

போர்த்துக்கல் நாடு தனக்குக் கீழ் வைத்துள்ள ஆபிரிக்க காலனி நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டுமென்று ஐ. நா. வற்புறுத்தியுள்ளது.

நியுயோர்க், டிசம்பர் 15

**போர்த்துக்கல் நாடு தனக்குக் கீழ் வைத்துள்ள ஆபிரிக்க காலனி நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டுமென்று ஐ. நா. வற்புறுத்தியுள்ளது.**

**இது சம்பந்தமான தீர்மானம் ஒன்று ஐ. நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டது.**

போர்த்துக்கல் தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கும் அங்கோலா, மொஸாம்பிக், போர்த்துக்கல் கினி ஆகிய காலனிகளுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று அந்தத் தீர்மானத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 94 நாடுகளும் எதிராக 6 நாடுகளும் வாக்களித்தன. இவ்வாக்கெடுப்பில் 16 நாடுகள் கலந்து கொள்ளவில்லை. அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ் போர்த்துக்கல் ஆகிய நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

காலனி நாடுகளிலோ அல்லது அண்மையிலுள்ள நாடுகளிலோ மக்கள் சுதந்திரமாக வாழ இடமளிக்க வேண்டும். இந்த மக்களின் வளர்ச்சிக்காக நிதி மற்றும் பொருளாதார உதவி ஆகியவற்றை உறுப்புநாடுகள் கொடுத்துதவ வேண்டும் என மேலும் அத்தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

## ஆர்ப்பாட்டம் செய்த

# மாணவர் மீது நடவடிக்கை இல்லை

## கருணாநிதி அறிவிப்பு

சென்னை, டிச. 15

சென்னையில் தமிழ் பயிற்சிமொழிக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் சம்பந்தமாக மாணவர்கள் மீது எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் யாவற்றையும் விலக்கிக்கொள்வதென தமிழ்நாடு அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் மாணவர் பயிற்சிமொழி விடயம்பற்றி எல்லாக்கட்சித் தலைவர்களையும் அழைத்துப்பேச்சுவார்த்தை நடத்தியபின் இம்முடிவு எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். பயிற்சிமொழி விடயத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களின் ஆலோசனையைப்பெற இருப்பதாகவும், பயிற்சிமொழி விடயத்தில் தமிழ்மொழி தெரியாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று தாம் பேசியதாகச்சொல்லப்படுவது மிகவும் தவறானதெனவும், தனக்கோ அரசுக்கோ அவ்வித எண்ணமில்லை என்றும் தமிழோடுஆங்கிலமும் பாடமொழியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று எல்லாக் கட்சிகளின் தலைவர்களுடனும் முதல்வர் நான்குமணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். இக்கூட்டத்தில் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி கலந்துகொள்ளவில்லை நிஜலிங்கப்பா காங்கிரஸ், குடியரசுக்கட்சி, சுதந்திரா, தமிழரசுக்கட்சி ஆகியனவும் கலந்துகொண்டன.

இதுபற்றி தமிழ்நாடு எதிர்க்கட்சித்தலைவர் திரு. கருத்திருமன் கருத்துத் தெரிவிக்கையில், இக்கூட்டம் கண்துடைப்புச்செயலாகும். மிக அவசர அவசரமாகக் கூட்டப்பட்டது. ஒரு நிகழ்ச்சி நிரலும் இல்லை. பயிற்சிமொழியைத் தெரிந்தெடுக்கும் உரிமை மாணவருக்கும் பெற்றோருக்குமே இருக்கவேண்டும். இந்த விடயத்தைத் தீர்மானிப்பதற்கு சட்டசபைக்கு எவ்வித உரிமையுமில்லை. அது பெற்றோரும் மாணவர்களும் தீர்மானிக்கவேண்டியது. இந்தக்கோரிக்கையை தமிழ்நாடு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் எனக் கூறினார்.

## இலங்கை வரும் பிரிட்டிஷ் விஞ்ஞானி

கொழும்பு, டிச. 15

இவ்வாரம் கொழும்பில் நடைபெறவிருக்கும் இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச்சங்கத்தின் 26-வது வருடாந்த விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானியாகிய டாக்டர் டி. ஈ. அல்போன் இங்கு விஜயம்செய்யவிருக்கிறார். பிரிட்டிஷ் மத்திய மின்சார உற்பத்தி சபையின் பிரதம விஞ்ஞானியாகிய டாக்டர் அல்போன் பிரிட்டிஷ் விஞ்ஞான அபிவிருத்திச்சங்கத்தின் பிரதிநிதியாக இம்மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தின் அதிதியாக இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும் டாக்டர் அல்போன் பிரிட்டனின் முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவராவர். பிரிட்டிஷ் ரோயல் சங்கம், பிரிட்டிஷ் பௌதிக நிறுவனம், அமெரிக்க மின்பொறியியலாளர் நிறுவனம் ஆகியவற்றில் கௌரவ அங்கத்தவராகவும் அவர் கடமையாற்றுகிறார். பிரசித்திபெற்ற விஞ்ஞானியாக விளங்குவதுடன் மின்சார கைத்தொழில் இணைப்பு சபையின் விஞ்ஞான ஆலோசகராகவும் அல்டர்மஸ்டன் நகரிலுள்ள மின்சார ஆய்வுகூடங்களின் நிர்வாக அதிபர்களில் ஒருவராகவும் இவர் பணிபுரிகிறார் மின்சாரம் பற்றியும் அணுசக்திபற்றியும் அரிய ஆராய்ச்சி நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

## இடமாற்றம்

மாவிட்டபுரம், செவ்.

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன தொழிற்சாலை உற்பத்தி அதிபராக கடமையாற்றிய திரு. அ. பொ. சதானந்தன் கொழும்பு தலைமைக்காரியாலயத்துக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

[illegible] சிக்களை நடத்தினேன்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

விஸ்தரிப்படைந்து வரும் இலங்கைத் தகவல் சேவைகளை புனரமைப்புச் செய்வதில் திரு. அமுனுகம பெரும் முயற்சி எடுத்துவருகிறார். இலங்கை சர்வகலாசாலைப் பட்டதாரியான அவர் அரசாங்க சேவையில் சேருவதற்கு முன்னர் சர்வகலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

கடந்த இரு வருடங்களில் இரண்டாவது தடவையாக பிரிட்டனுக்கு விஜயம்செய்திருக்கும் அவர் பிரிட்டனின் மத்திய தகவல் காரியாலயத்தை நேரில் சென்று பார்வையிட்டார். பிரிட்டிஷ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கும் (பி.பி.ஸி) விஜயம் செய்த அவர் வெளிநாட்டு தகவல்சேவை அதிகாரிகளை சந்தித்துப் பேசினார். இதனையடுத்து பி.பி.ஸி டெலிவிஷன் நிலையத்திற்கும் அவர் விஜயம் செய்தார்.

லண்டனில் தங்கியிருக்கும்போது வெளிவிவகார சாம்ராஜ்ய காரியாலயத்திற்கும் உள்துறை இலாகாவுக்கும் அவர் விஜயம்செய்தார். பிரிட்டிஷ்

## கண்காட்சியில் கலை இலக்கியப் பிரிவு

வெள்ளவத்தை, செவ்.

அடுத்தவருடம் யாழ். நகரில் நடைபெறவிருக்கும் கைத்தொழில் பொருளாதார பல்வளக்கண்காட்சிபிரமாண்டமான அளவில் நடைபெறவிருக்கிறது என்றும் வடமாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளினதும் ஆசிரியர்களும் மாணவர்களும் திணைக்கள ஊழியர்களும் விவசாயிகளும் இக்கண்காட்சியில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்களென்றும் கண்காட்சி அமைப்புக் குழுவைச் சேர்ந்தவரும் இளந்தமிழர் முன்னேற்றக் கழகத் தலைவருமான திரு. வி. பத்மநாதன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

'ஈழத்து இலக்கிய சஞ்சிகைகளுக்கும் எழுத்தாளர்களுக்கும் கௌரவத்தையும் புது உற்சாகத்தையும் கொடுக்க வேண்டுமென்ற இளந்தமிழர் முன்னேற்றக்கழகத்தின் நோக்கத்திற்கமைய ஈழவளக் கண்காட்சியில் புத்தகப்பிரிவு, கலைப்பிரிவு, இலக்கியப்பிரிவு என்று வெவ்வேறுபிரிவுகள் அமைக்கப்படவிருக்கின்றன' எனவும் தெரிவித்தார்.

[illegible] பலம் காடினர் மாவத்தையில் அரசாங்கம் வழங்கிய 40 பேர்ச் காணியில் அகில இலங்கை இந்துமாமன்றம் கலாச்சார நிலையத்திற்குச் சமீபத்தில் அத்திபாரமிட்டு கட்டிடத்திற்கு பணம் திரட்டிவருகிறது.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் செல்வி ஆனந்தவல்லி சச்சிதானந்தாவின் நடனவிருந்து நடைபெற்று பல்லாயிரம் ரூபா நிதி சேர்த்ததையிட்டு செயற்குழு மகிழ்ச்சி தெரிவித்தது.

இதில் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதெனத் தீர்மானித்து திருக்கேதீஸ்வரத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் நடாத்திவரும் சிவானந்த குருகுலத்திற்கு வேண்டிய பண உதவியை ஆலய தர்மகர்த்தாக்களுக்கு எழுதியும் நேரில் கலந்து பேசியும் பெற்றுக்கொள்ள தலைவர் பொதுச்செயலாளர், குருகுலச் செயலாளர், பொருளாளர், திரு. மு. வைரவப்பிள்ளை, திரு. வி. கே. கந்தசாமி, திரு. ச. சோமசுந்தரம் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவுசெய்யப்பட்டது

அகில இலங்கை இந்துமாமன்றத்துடன் இணைக்கப்பட்ட சங்கங்களுடனும் சைவாசிரியர் சங்கங்களுடனும் மற்றும் அரசாங்கப் பிரத்தியேக ஊழியர் சங்கங்களுடனும் மன்றப் பிரதிநிதிகள் கூடிய விரைவில் சந்தித்து நிதியைச் சேகரிக்க நடவடிக்கை எடுப்பதென வற்புறுத்தப்பட்டது.

நிதி சேகரிக்கும் பத்திரங்களைவிட ஒரு ரூபா இரண்டு ரூபா ஐந்து ரூபா பத்து ரூபா நிதிச்சீட்டுகள் அச்சிடத் தீர்மானிக்கப்பட்டது

## கோரிக்கை

அம்பன், செவ்வாய்

நாகர்கோயில் மத்திய மகாவித்தியாலயம் மழைக்காலங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப் படுவதால் இப்பாடசாலையை அடிக்கடி மூடவேண்டிய நிலையேற்படுகின்றது. இதனால் இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது. எனவே இப்பாடசாலையை நாகர்கோயில் வடக்கிலுள்ள அரசாங்க மேட்டு நிலத்தில் அமைத்துத் தருமாறு கேட்கும் மகஜரொன்றை நாகர்கோயில் தரவை சனசமூக நிலையம் கல்வி அமைச்சருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

## அழிக்கின்றன

சுழிபுரம், செவ்.

பொன்னாலை வயல்களிலுள்ள நெற்பயிர்களை கட்டாக்காலிகள் பகல் வேளையில் அழித்து வருகின்றன. பல நூற்றுக்கணக்கான ரூபா செலவு செய்து நெல் விதைப்பு செய்த விவசாயிகள் பயிரைப் பாதுகாக்க பெரும் முயற்சி எடுத்துவருகின்றனர். பயிர்ச் செய்கைக்குழுவினர் இதனைக் கவனித்து ஆவன செய்யுமாறுவிவசாயிகள் வேண்டியுள்ளனர்.

## கமிட்டி உறுப்பினர்

கோட்டை, செவ்வாய்

ஆயுர்வேத வைத்திய கல்லூரி மாணவர்களின் தாய்ச்சங்க தேர்தலில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. ஏச். எம். சேனாதிர உபதலைவர் திரு. அமரசிறி பொன்னம்பெருமா செயலாளர் திரு. ஏ. பி. ஆர். பியரத்ன உபசெயலாளர் திரு. பு. லோகசுந்தரம் கைலாயநாதன் உப பொருளாளர் திரு. சரத்குணசிங்க.

## பெற்றோர்சங்கம் கோரிக்கை

நெடுங்கேணி, செவ்.

வவனியாத் தொகுதியிலுள்ள குளவிசுட்டான் அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் உட்படமற்றும் ஆசிரியர்களையும்நியமிக்கும்படி பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வி அதிகாரியிடம் கோரியுள்ளது. எட்டாம் வகுப்புவரை உள்ள இப்பாடசாலையில் 100 மாணவர்கள் கல்வி பயில்வதாகவும்தற்பொழுது 2 ஆசிரியர்கள் மட்டுமே கற்பிப்பதாகவும் கல்வி அதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெற்றி பெற்றவர் கொலை

வெள்ளவளி, திங்கள்

வெள்ளவளி கிராமசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற அபேட்சகர் ஒருவர் கொல்லப்பட்டார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் தோல்வியுற்றவரும் இன்னொருவரும் வெற்றிபெற்றவரும் சென்றுகொண்டிருக்கும்போது திடீரென்று வெற்றிபெற்றவர் தாக்கப்பட்டார் தோல்வியுற்றவரே அவரைத்தாக்கியதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

[illegible] முறைச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க கிராமந்தோறும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறார்.

இதற்கமைய அளவெட்டியில் நடத்தப்பட்ட இக் கருத்தரங்குக்கு திரு. த. [illegible] முதுமையடைவோம் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். இவ்விடயத்தில் பொலிசார் மிக கண்டிப்பாக நடப்பார்கள். குற்றம் புரிவோர் சுலபத்தில் தப்ப முடியாது.

## 'செருப்புக்காலால் வயிற்றில் மிதித்தார்'

வல்வெட்டித்துறை, செவ்.

'உடையார் என்பவர் எனக்கு அடித்ததும் நான் கீழே விழுந்துவிட்டேன். விழுந்ததும் செருப்புக்காலால்வயிற்றில் மிதித்தார். அதைத் தொடர்ந்து பொலிசாரும் எனக்கு கம்புகளால் அடித்தனர். பின்னர் ஜீப்வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு வல்வெட்டித்துறைபொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று என்னையும் மற்ற எதிரிகளையும் தாக்கியதோடு காதைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணமும் போடச் செய்தனர்'. இவ்வாறுகரணவாய் வடக்கைச் சேர்ந்த வேலு கைம்பெண் சின்னப்பிள்ளை என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராசா முன்னிலையில் சாட்சிய மளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கில் இவர் 5-வது எதிரி.

இவ்வழக்கு கரணவாய் வடக்கைச்சேர்ந்த வே. தங்கவேல், வே. தேவராசா, அகமலர், துரையன், வே. சின்னப்பிள்ளை ஆகியோர் கடந்த தை மாதம் 24-ந்திகதி உடுப்பிட்டி பகுதிக்கு வெலியாத்து உடையாராகக் கடமையாற்றிவரும் வி. செல்லையாவை கடமைசெய்ய விடாது தடுத்தும், தாக்கியதாகவும் வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டது.

சின்னப்பிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- சம்பவநாள் நான் எனது வீட்டுப் படலையைக் கட்டிவிட்டு வழமைபோல் அரிசிஇடிக்கச்சென்றிருந்தேன். அரிசி இடிக்கும் இடத்திற்கு, உடையார்என் வீட்டிற்கு வந்திருப்பதாகச் சொல்லி ஆள் வந்ததைத் தொடர்ந்து வீட்டிற்குப் போனேன். அங்கே இரு பொலிஸ்காரரும், வேறொருவரும் நின்றனர். எனக்கு உடையாரைத் தெரியாது. உடையார் என்பவர் வேலி சம்பந்தமாக என்னுடன் கதைத்துவிட்டு எனக்கு அடித்தார். செருப்புக்காலால் மிதித்தார். பொலிசாரும் கம்புகளால் அடித்தனர். பிறகுபொலிஸ் நிலையத்திற்கு ஜீப் வண்டியில் எடுத்துச் சென்றனர். ஜீப் வண்டியில் என்னை ஏற்றியபோது அதற்குப்பக்கத்தில் நின்று இருவர் குளறினர். அந்த நேரத்தில் எனது பிள்ளைகள் நால்வரில் ஒருவராவது அவ்விடத்தில் இல்லை. பொலிஸ் நிலையத்தில் வைத்து என்னையும் மற்ற எதிரிகளையும் சுப்பிரமணியம் பொலிஸ் ஐயா உட்படப் பலர் தாக்கினர். அவர்கள் எங்களைத் தாக்கும்போது 2வது எதிரி அம்மா, அம்மா என்று குளறினார். காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணமும் போடுவித்தனர். பொலிஸ் நிலையததால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுவிட்டு பிறகு றிமாண்டில் வைத்தனர்.

க. சுப்பிரமணியம் கிராமசேவகர் சாட்சியமளித்தார். மேல்விசாரணை இம்மாதம் 21-ந்திகதி சாவகச்சேரிக் கோட்டில் விசாரணை செய்யப்படும்.

## சமமுடிவு

பருத்தித்துறை, செவ்

மன்னார் மாவட்ட உதைபந்தாட்டக் கழகத்திற்கும் வதிரி பொமேஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு தரப்பும் தலா இரு கோல்களைப் போட்டு வெற்றி தோல்வியின்றிப் போட்டியை முடித்தனர். வதிரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எம். வேதாபரணம் மத்தியஸ்தம் வகித்தார்.

## முடிவு திகதி நீடிப்பு

கொழும்பு, செவ்.

அரசாங்க சேவைக்கு ஆள் சேர்ப்பதற்கான பரீட்சைக்கு வயது எல்லை கூட்டப்பட்டதை தொடர்ந்து, இப்பரீட்சைக்கான முடிவுதிகதி 71-ம் ஆண்டு ஜனவரி 6-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை. ஆதலால் நீங்கள் இருளிலே பேசியது எதுவுவோ, அது வெளிச்சத்தில் கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின் மேல் கூறப்படும்.

—இயேசுநாதர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

ஏழுமலையான் ஆண்டு சாதாரண வருஷம் மார்கழி மாதம் 1-ம் தேதி (16-12-70)


## நான்கு அமைச்சுக்கள்

நிதி, வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் ஆகிய நான்கு முக்கிய அமைச்சுக்களுக்குமிடையில் நெருங்கிய ஒத்துழைப்பு இருக்க வேண்டுமென்றும் இந்த நான்கு அமைச்சுக்களும் எடுக்கும் நடவடிக்கைகளும் திட்டங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டதாக இருக்கவேண்டுமென்றும் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா உத்தரவிட்டிருக்கிறார். எப்பொழுதோ செய்திருக்க வேண்டிய இக் காரியத்தை இப்பொழுதாவது செய்த முன்வந்த பிரதமர் பாராட்டுக்குரியவர்.

'சிவப்பு நாடா' எனப்படும் திறைசேரியின் நடவடிக்கை பற்றி இதற்கு முன்னரும் அமைச்சர்களாக இருந்த பலரும் ஆட்சிமன்றத்தில்கூட கண்டித்து வந்திருக்கின்றனர். ஆனால் செயலில் எதையும் அவர்கள் செய்ததாகத் தெரியவில்லை. ஓர் அமைச்சு திட்டும் திட்டங்களையும் எடுக்கும் நடவடிக்கைகளையும் அந்தந்த விஷயங்களில் தொடர்புள்ள இதர அமைச்சுக்கள் தொடர்ந்து நிறைவேற்றுவதில்லையென்றும் ஓர் அமைச்சின் திட்டங்கள் நிறைவேருமல் போவதற்கு அதனுடன் தொடர்புள்ள இதர அமைச்சுக்கள் இடையூறாக இருப்பதாகவும் பொதுவாகப் புகார் கூறப்படுவதுண்டு.

காணி அமைச்சு முடிக்குரிய காணிகளை குடியேற்றத்திட்டங்களுக்காகப் பங்கிட்டுக்கொடுக்கும், விவசாய அமைச்சு இந்தக் குடியேற்றத் திட்டங்களில் விவசாய விஸ்தரிப்புக்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும், விவசாயத்துக்குத் தேவையான பாசன வசதியை நீர்ப்பாசன அமைச்சு செய்ய வேண்டும். இதற்கான நிதி வசதிகளை நிதி அமைச்சு கீழுள்ள இலாகாக்களுக்குமிடையில் ஒத்துழைப்பும் ஒற்றுமையும். ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமும் இல்லையானுல் அதனுல் அரசாங்கத்துக்கு வீண் செலவும் மக்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும்தான் ஏற்படும். இதுதான் கடந்தகாலத்தில் கண்ட அனுபவரீதியான உண்மையும்கூட. திரு. டட்லி சேனநாயகா பிரதம மந்திரியாக இருந்தபோது உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தை ஆரம்பித்து அது எப்படிச் செயற்படுகிறதென்பதைத் தாமே நேரில் கண்டறிவதற்காக நாட்டின் பல பாகங்களுக்கும் சென்றபோது விவசாய இலாகா, காணி இலாகா, நீர்ப்பாசன இலாகா ஆகியவைகளுக்கிடையில் ஒத்துழைப்பும் ஒருமுகப்படுத்த திட்டமுமில்லாததால் விவசாயிகள் கஷ்டநஷ்டமடைவதையும் உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டம் சரியாக வெற்றிபெற முடியாமல் தடைப்பட்டிருப்பதையும் கண்டறிந்தார். அச்சமயத்தில் அமைச்சுகளுக்கும்இலாகாக்களுக்குமிடையில் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டம் இருக்கவேண்டியதன் அவசியத்தை நாம் இப் பத்தியில் வலியுறுத்தி இருந்தோம். இவ்வித ஒத்துழைப்பும் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமும் இல்லாததன் விளைவாக உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கம் பொய்த்துவிட்டதென்பதை இன்றைய அரசாங்கம்தான் வெளிப்படுத்தியிருக்கிறது.

வெறும் புள்ளிவிபரங்களை நம்பியிருப்பதால் பயனில்லை. திட்டங்கள் செயற்படவேண்டும்; அவை பயனளிக்க வேண்டும்.

இந்தவகையில் வர்த்தகம், கைத்தொழில், விவசாயம், நிதி ஆகிய நான்கு முக்கிய அமைச்சுக்களுக்குமிடையில் ஒத்துழைப்பும்

# சமஷ்டிக் குடியரசில் கல்வி பொருளாதாரக்குறிக்கோள்

**அரசியல் அமைப்பு விவகார அமைச்சிடம் தமிழரசுக்கட்சி சமர்ப்பித்துள்ள 'சமஷ்டிக் குடியரசு அரசமைப்பு' யோசனைகளில் ஒரு பகுதி இது.**

பகுதி V
கல்வி

48. ஒவ்வொருபிள்ளையும் கல்வி கற்பதற்கான உரிமைக்கு-

(அ) பிள்ளையின் 14-ம் வயதுவரை கட்டாயக்கல்வி பெறல் மூலமும்;

(ஆ) உயர்கல்வி, உயர் தொழிற்கல்வி, தொழில் நுட்பக்கல்வியுட்பட எல்லாக் கல்வியும் இலவசமாக வழங்கப்படல் மூலமும், 24-ம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய திறமையின் அடிப்படையில் அனைவருக்கும் கல்வி கிடைக்கக் கூடியதாகவும் அத்துடன் அனைவரும் கல்வி பெறக் கூடியதாகவும் செய்வதன் மூலமும்;

(இ) பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பாட போதனை பிள்ளையின் தாய் மொழியில் அளிக்கப்படுதல் மூலமும்,

உத்தரவாதமளிக்கப் படுகிறது.

49. (அ) ஒவ்வொரு கல்விக்கூடத்திலும் ஒவ்வொரு சிங்களப் பிள்ளைக்கும் சிங்களமே போதனுமொழியாதல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு கல்விக்கூடத்திலும் ஒவ்வொரு தமிழ்ப் பிள்ளைக்கும் தமிழே போதனுமொழியாதல் வேண்டும்.

(இ) கலப்பினப் பிள்ளைகளுக்கு அல்லது முஸ்லிம் பிள்ளைகளுக்கு அல்லது ஏனையோருக்குச் சிங்களம் அல்லது தமிழ் போதனுமொழியாதல் வேண்டும்

50. 31-ம் உறுப்புரையிற் கூறப்பட்டவை எப்படியிருப்பினும் எல்லாப் பாடசாலைகளிலும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அப்பிள்ளையின் சமயத்தை அனுட்டிக்கும் ஆசிரியரால் அதன் 14-ம் வயதுவரைக்கும் அப்பிள்ளையின் சமயம் போதிக்கப்படல் வேண்டும்.

பகுதி VI
பொருளியற் குறிக்கோள்:

51. குடியரசினதும் மாநிலங்களினதும் பொருளாதாரம் தொடர்பிலான முறைகளும் சட்டங்களும்-

(அ) மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழிப்பதற்

53. இத் திட்டமானது, 86ஆம் உறுப்புரையின் கீழ் நடாத்தப்பெற்ற மத்திய அரசாங்கத்தின் இருசபைகளினதும் இணைப்புக் கூட்டமொன்றினுல் திருத்தத்துடனே அன்றியோ அங்கீகரிக்கப்பட்டதன்மேல், சட்டத்தின் வலுவுடைத்தாதல் வேண்டும்.

54. தேசிய பொருளாதாரத்திட்டமானது, தேசியச் செல்வத்தைப் பெருக்குவதையும் மக்களின் வாழ்க்கை வளன்களின் தரத்தை உயர்த்துவதையும் இலக்காகக் கொள்ள வேண்டுமென்பதுடன், மாநிலங்களிலுள்ள வேலைவாய்ப்புக்கள், மாநிலங்களின் பொருளாதாரப் பின்னடைவு, பொருளாதார விருத்தித் தேவைகள், மூலப்பொருட்கள் மூலவளங்களின் கிடைக்குநிலை, தொலைத் தொடர்புகள், போக்குவரத்து வசதிகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட வேண்டியதுமாகும்

55. குடியரசினதும். மாநிலங்களினதும் அதிகாரத்திலுள்ளோர் தமது முகவரான்மைகளினூடாக அத்திட்டத்தை நிறைவேற்றி முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

அதிகாரங்கள் சட்டத்தால் வரையறுக்கப்படல் வேண்டும்

63. மத்தியசட்டமன்றத்தின் இரு சபைகளினுலும் ஐந்து மாநிலங்களின் ஆட்சிமன்றங்களினுலுமான வொரு தேர்தல் வாக்காண்மைக் குழாத்தினுல் ஜனதிபதி தெரிவுசெய்யப்படல் வேண்டும், 85 ஆம் உறுப்புரையின்கீழ் நடாத்தப்பெற்றதான மத்திய சட்டமன்றத்தின் இருசபைகளினதும், ஐந்து மாநிலங்களின் ஆட்சி மன்றங்களினதும் இணைப்புக் கூட்டமொன்றில் அளிக்கப்பட்ட வாக்குளில் பூரண பெரும்பயன்மை வாக்குகளைப் பெறுபவர் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்படல் வேண்டும்,

64. மரணம், பதவிதுறத்தல் அல்லது ஜனதிபதி மீது குற்றத் தீர்மானம் காரணமாக ஜனதிபதிப் பதவி வெற்றிடமாகுமாயின் ஜனதிபதி எம்மாநிலத்தால் நியமிக்கப் பட்டிருந்தாரோ அம்மாநிலம் எஞ்சிய காலத்திற்கு அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியாயமான வொரு காலவெல்லைக்குள் இன்னொருவரை நியமித்தல் வேண்டும்.

65. குடியரசின் ஜனதிபதிபதவிக்குத் தெரிந்தெடுக்

களையும்;

(ஆ) குடியரசின் அற்றேணி-ஜெனரலையும்;

[இ] குடியரசின் கணக்காய்வார் தலைமையதிபதியையும்;

(ஈ) மத்திய மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும், உயர்நீதிமன்றத்தினதும்நீதிபதிகளையும்;

[உ) அரசாங்கசேவைஆணைக்குழுவின் உறுப்பினர்களையும்;

(ஊ) 16 (xiii)உறுப்புரையின்கீழான நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும்;

[எ] 52ஆம் உறுப்புரையின்கீழான தேசியவிருத்தித் திட்டத்தைத்தீட்டும்ஆணைக் குழுவின் உறுப்பினர்களையும்;

[ஏ] தேர்தல் ஆணையாளரையும்;

[ஐ] வெளிநாடுகளுக்கான பிரதிநிதிகளையும்;

[ஒ] விசாரணை ஆணைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் முதலானோரையும்;

நியமிக்கும் அதிகாரமுடையராதல் வேண்டும்.

73. ஜனதிபதியானவர் வேறுநாடுகளின் இராசதந்திரப் பிரதிநிதிகளை வரவேற்று அவர்களது உறுதி ஆவணங்களை ஏற்றுக்கொள்வார்.

# சர்வதேசக் கொள்கையும் ஜனதிபதி தெரிவுமுறையும்

56. கமத்தொழில் தொடர்பிலான கொள்கையானது, இத்தொழிலுக்குக் காணிக்கொள்வனவிலும் பங்கீட்டிலும்ஒதுக்கீட்டிலும் மற்றும் கடன்வசதி, கமத்தொழிற் கருவிவசதி, பசளை வசதி முதலியனவற்றிலும் விசேட சிர[illegible]த காட்டுவதன்மூலமும் சலுகைகள் வழங்குவதன் மூலமும், கூட்டுறவு கூட்டாங்க நிறுவனங்களை உருவாக்கலையும் நிறுவலையும் ஊக்குதற்கு

கப்படுவதற்குமாநிலங்களின் ஆட்சிமன்றங்கள் மட்டுமே வேட்பாளர்களை நியமித்தல் வேண்டும். எம்மாநிலத்தினுல்நியமிக்கப்பட்டவர் குடியரசின் ஜனதிபதிபதவிக்குத் தெரியப் பட்டாரோ, அம்மாநிலத்தின் வேட்பாவர் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து பத்தாண்டு காலத்திற்கு அம்மாநிலம் ஜனதிபதிப்பதவிக்கு வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் உரிமையை இழத்

74. குற்றவாளி எவருக்கேனும் மன்னிப்புவழங்கும் அதிகாரம் ஜனதிபதிக்கு உண்டு.

75. ஜனதிபதியின் சட்டமியற்றுந்துறை அதிகாரங்களாவன:,

[அ] பாராளுமன்றத்தை கூட்டவும், கூட்டத்தொடரை முடிக்கவும்கலைக்கவும் உள்ள அதிகாரத்தையும்;

[ஆ] பாராளுமன்றம் அல்லதின்மீது நடவடிக்கை

## 'கத்தோலிக்க பீடத்தின் சேவை அளப்பரியது'

யாழ்ப்பாணம். புதன்

'கத்தோலிக்க மதத்தவர் இல்லாத எமது கிராமத்தில் யாழ். கத்தோலிக்கபீடம் அளித்துள்ள சேவை மிகவும் அளப்பரியது. கல்வி, பொருளாதார வசதியற்று மிகவும் பின்தங்கிய நிலையில் சிறுபான்மைத் தமிழ் மக்கள் வாழும் எமது கிராமத்தில் இன்று எத்தனையோ மாணவர்கள் இப்பாடசாலையில் கல்விபயின்று முன்னேறியுள்ளனர் இதனுல் சுவாமி ஞானப்பிரகாசருக்கும் அவரது வழித்தோன்றல்களுக்கும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளார்கள்'

மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் திரு வி குருசுமுத்துவுக்கும், உதவி ஆசிரியர் திரு வி சதாசிவத்துக்கும் அளித்த பிரிவுபசார விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட குச்சவெளிக்காரியாதிகாரி திரு சி பற்குணம் பேசுகையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலை மண்டபத்தில் திரு செ ஐயாத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு பற்குணம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: 1930ம் ஆண்டளவில் கல்விவாசனைகொஞ்சம்கூட இல்லாதிருந்த நமது சமூக மக்களை திருவாளர்கள் தவசிகந்தர், கறுவலார், க செல்லையா ஆகியோர் முன்னேற்றுவதற்கு அரும் பாடுபட்டனர்.

ஆசிரியர் திரு க நடராசா பேசுகையில், ஒரு சமூகத்தை வளர்க்கக்கூடிய முறையில் யாரேனும் ஒருவர் உதவினுரோ அவருக்குநாம்செலுத்தும் நன்றிக்கடன் அதே சமூகத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்யும் என்று குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் திருவாளர்கள் அந்தோனிப்பிள்ளை, எஸ் யோகசிங்கம், கே கதிரேசு, செல்வன் யோகராசா. செல்வன் மங்களதாசன் ஆகியோரும் பேசினர்,

## மாநகரசபை பொறுப்பில் யாழ். விளையாட்டு அரங்கு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கு சுற்றுமதிலை கட்டுவதற்கு புதைபொருளாராய்ச்சி இலாகா யாழ்ப்பாண மாநகரசபைக்கு அனுமதி வழங்கி அதற்கான பொறுப்பையும் ஒப்படைத்துள்ளது இவ் விளையாட்டு அரங்கு தொடர்ந்து மாநகர சபையின் பொறுப்பில் இருந்துவரும்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம்செய்து யாழ். நகரத்தின் நடுவே அமைந்துள்ள இந்தவிளையாட்டு அரங்கை அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியும் கலைகலாச்சார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியும், புதைபொருள் இலாகாவின் ஆணையாளரும் யாழ். நகரபிதாவும் தனிப்பட்ட விளையாட்டுப் பகுதிப்பிரமுகர்களும் சுற்றி பார்வையிட்டனர். அதன் பின் நடந்த மகாநாட்டில் ஒரு சமரச முடிவுஎடுக்கப் பட்டது.

யாழ் விளையாட்டு அரங்கு நகரத்து மக்களுக்கும், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் பொதுச்சபைகளுக்கும் மிக முக்கியமான படியாலும், மாநகரசபை ஆயிரக்கணக்கான ரூபாவை இதற்கென செலவுசெய்துள்ளபடியாலும் இதனை மாநகரசபையின் பொறுப்பில் விடுவதே பொருத்தம் என்று இம் மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

(கு வி. .ம)

## வேலையிலிருந்துவிலகினுலும் லயத்தில் இருக்கலாம்

### மசோதா நிறைவேறியது

கொழும்பு, திங்கள்

வேலைநீக்கஞ் செய்யப்படும் தோட்டத் தொழிலா தோட்டத் தொழிலாளி ஒருவர் வேலையிலிருந்து நீங்கிய பின்னரும் அதே லயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தரிப்புக்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும், விவசாயத்துக்குத் தேவையான பாசன வசதியை நீர்ப்பாசன அமைச்சு செய்ய வேண்டும். இதற்கான நிதி வசதிகளை நிதி அமைச்சு கவனிக்கவேண்டும்.

இந்த நிலையில் அமைச்சுக்களுக்கும் அவைகளின்டும்; அவை பயனளிக்க வேண்டும்.

இந்தவகையில் வர்த்தகம், கைத்தொழில், விவசாயம், நிதி ஆகிய நான்கு முக்கிய அமைச்சுக்களுக்குமிடையில் ஒத்துழைப்பும் ஒருமுகப்படுத்தும் திட்டமும் வரவேற்கக்கூடிய பயன்தரக்கூடிய செயலாகும்,

# ஏழு குழந்தைகளே . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர் ஆகியோருக்குசிறிது கூடுதல் சம்பளம் கிடைக்கிறது. சிலவேளைகளில் என்ஜினியர்களிலும் பார்க்க தொழிலாளர்கள் அதிக சம்பளம் பெறுகிறார்கள். தொழிற்சாலை நிர்வாகியிலும்பார்க்க சில வேளைகளில திறமைமிக்க தொழிலாளி கூடுதலாகச் சம்பளம் பெறுகிருன்.

சோவியத் யூனியனில் தொழிலாளர்களிடையே ஆண்பெண் என்ற வித்தியாசமோ சம்பள வேறுபாடோ இல்லை கர்ப்பிணிகளாளல் நாலு மாதங்களுக்கு முழுச் சம்பளத்துடன் விடுமுறை அளிக்கிருர்கள் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு பால் கொடுப்பதற்காக வேலை நேரத்திலேயே ஒரு மணி நேரம் லீவு கொடுக்கிருர்கள். மூன்று குழந்தைகளுக்கு மேல் குழந்தைகள் உடைய குடும்பத்திற்கு வாடகை இன்றியே வீடு கொடுக்கிருர்கள் ஏழு குழந்தைகளுக்கு மேல் குழந்தைகளைப் பெற்றதாய்மார்களுக்கு "வீரத்தாய்" என்ற பட்டமும், தங்கப்பதக்கமும் அரசாங்கம் அளிப்பதோடு, நாட்டில் எங்கும் செல்வதற்கு இலவச பிரயாண வசதிகளும் செய்து கொடுக்கப்படுகிறது.

# சோவியத் நாட்டில் கூட்டுப்பண்ணைகள்

இதையடுத்து ரேக்மினியன் கூட்டுப்பண்ணையின் தலைவர் சுலாப்பேடி அனட்டேரியேவ்சோவியத்தில்கூட்டுப்பண்ணைகள் பற்றி விளக்கமாக எடுத்துச்சொன்னுர். இவர்நிர்வாகியாகஇருக்கும் இந்தக் கூட்டுப்பண்ணையில் 6 ஆயிரம் பேர் வாழ்கிருர்கள் கூட்டுப்பண்ணையில் மிருகங்களை வளர்ப்பதற்காக 20ஆயிரம் ஏக்கர்நிலம் வேருகஉண்டு. இங்கு கோதுமை, கம்பளி, பருத்தி ஆகியனவிளைவிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலைக்கென 100 ட்ராக்டர்கள் இருக்கின்றன ஒவ்வொரு ட்ராக்டர்களும் எழுநூறு குதிரை வேகம் கொண்டவை இதைவிட கூட்டுப்பண்ணையில் பயன்படுத்தத்தக்க வகையில் விசேஷ இயந்திரங்களும் இங்கு இருக்கின்றன ரேக்மினியன் 'குடியரசு கஸ்பியன் கடலுக்கு அண்மையில் இருக்கின்றது பூச்சிமருந்து தெளிப்பு உரமிடுதல் போன்ற செயல்களுக்கு விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இயந்திரங்களைப்பயன்படுத்தக்கூடியமுறையிலேயே இங்கு விவசாயம் செய்யப்படுகிறது.

இந்தக்கூட்டுப்பண்ணையில் வேலை செய்வோருக்கு சகல சேதிஞும் கொண்ட வீடுகள் உண்டு உதாரணமாக இக்கூட்டுப்பண்ணை நிர்வாகியாகியசுலாப்பேடி அனடேரிபூக்டேவுக்குரிய வீட்டில், தண்ணீர்வசதி மின்வசதி, தொலைபேசி, டெலிவிசன் ஆகிய சாதனங்கள் இருப்பதாக அவர் சொன்னுர்.

மேலும் அவர் கூறியதாவது, இந்தப்பண்ணையில் 3 உயர்பள்ளிகளும் 2 ஆரம்ப பள்ளிகளுக் இருக்கின்றன. இங்கு வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு மாதாந்தம் 240 ரூபிள (கிட்டத்தட்ட ரூபா 1320) சம்பளம் கிடைக்கும் இந்தக் கூட்டுப்பண்ணையிலுள்ள மாணவர்களை உயர்கல்வி கற்பதற்காக கல்லூரிகளுக்கும்பல்கலைக்கழகங்களுக்கும் பண்ணைச் செலவிலேயே அனுப்பிவைக்கின்றனர். இப்படிச் சென்றவர்கள் தங்கள் உயர்கல்வியைமுடித்தும் கொண்டதும் அப்பண்ணைகளிலேயே வேலை செய்வார்கள்

1920-ம் ஆண்டுக்குப்பின் சோவியத்தில் வேலையில்லாத் திண்டாட்டமென்ற பேச்சுக்கே இடமில்லை இன்றும்கூட தொழிலாளர்கள், விவசாயிகள்சோவியத்துக்கு தேவையுடையவர்களாய் இருக்கிருர்கள்,

சோவியத் சுதந்திரம் பெறுமுன் இப்பகுதிகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயேஇருந்தன. 1917-ம் ஆண்டுக்குமுன் இப்பகுதி இராணியாரின் ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்து வந்தது. இங்கு நாலு பருவங்கள் உண்டு சில பருவங்களில் வீடுகளிலுள்ள சில பகுதிகளில் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன.

## ஜப்பான் பத்திரிகை

ஜப்பானிலுள்ள கம்யூனிஸ்ட் பத்திரிகையான அஹஹத்தா பத்திரிகையின் தினப்பதிப்பு 4லட்சம் பிரதிகளும் வாரஇதழ் 10 லட்சம் பிரதிகளும் விற்பனையாவதாக இப்பத்திரிகையின் நிருபர் மகாகிரோ தனக்கா கூறினுர்.

## குறிக்கோள்:

51. குடியரசினதும் மாநிலங்களினதும் பொருளாதாரம் தொடர்பிலான முறைகளும் சட்டங்களும்-

(அ) மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழிப்பதற்கும்,

(ஆ) முதலாளித்துவச் சுரண்டலையும் ஏகபோகத்தையும் ஒழிப்பதற்கும்;

(இ) குடியரசினது அல்லது மாநிலங்களினது அரசாங்கத்தால் அல்லது கூட்டுறவு, கூட்டாக்க நிறுவகங்களால், உற்பத்தி, பங்கீடு, போக்குவரத்து என்பவற்றின் சாதனங்களையும் கருவிப் பொருட்களையும்கொள்ளல், கட்டுப்படுத்தல் என்பனவற்றுடன் சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட வரைவுக்குள், இத்துறைகளில் தனியார் முயற்சிகளை அனுமதித்தும்;

(ஈ) நாட்டின் உற்பத்திச் சக்திகளை இடையருது வளர்க்கவும்.

(உ) மக்களின் வாழ்க்கைத் தரத்தினைத்தொடர்ச்சியாக உயர்த்தவும், நேரடியாக நெறிப்படுத்துவனவாகும்.

52, குடியரசினதும்மாநிலங்களினதும், அனுமதிக்கப்பட்ட தனியார் முயற்சிகளினதும் பொருளியல் வாழ்வும் இயக்கமும், மத்திய அரசாங்கத்தினதும் ஒவ்வொரு மாநிலத்து அரசாங்கத்தினதும் அனுமதிக்கப்பட்ட தனியார் துறைக்கழகத்தினதும் பிரதிநிதிகளைக் கொண்டு ஜனுதிபதியினுல் நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழுவினுல் காலத்திற்கு காலம் தீட்டப்பட்ட தேசியப் பொருளாதாரத் திட்டமொன்றினுல் துணியப் பெறும்.

வசதி முதலியனவற்றிலும் விசேட சிர[illegible]த காட்டுவதன்மூலமும் சலுகைகள் வழங்குவதன் மூலமும், கூட்டுறவு கூட்டாக்க நிறுவனங்களை உருவாக்கலையும் நிறுவலையும் இ[illegible]க்குதற்கு நெறிப்படுத்த[illegible]படல் வேண்டும்.

57. அரசாங்கத்தின்உடைமையாயுள்ள நிறுவனங்கள் தொடர்பிலான கொள்கையானது. அந்நிறுவனங்களின் முகாமையைத் தொழிலாளர்களிடம் அல்லது தொழிலாளர்களால் தெரியப்பட்ட குழுமங்களிடம் காலப்போக்கில் கையளிக்கும் இறுதிக் குறிக்கோளுடன், அந்நிறுவனங்களின் தொழிலாளர்களை அந்நிறுவனங்களின் முகாமையில் மென்மேலும் பங்கேற்ச் செய்தற்கு நெறிப்படுத்தப்படல் வேண்டும்.

58, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பிலான கொள்கையானது. கூட்டுறவு இயக்கங்களை ஊக்குதல் மூலமும் அவைக்கு உதவுதல் மூலமும் தனியார் வியாபாரத் தாபனங்களின் ஏகபோக ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு நெறிப்படுத்தப்படல் வேண்டும்

59. தனியார் சொத்துடமை எல்லைகளும் தனியாளின் வருமான எல்லைகளும் சட்டத்தினுல் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

பகுதி VII

சர்வதேச விவகாரங்கள்:

60. சர்வதேச விவகாரங்களில், இலங்கைச் சமஷ்டிக் குடியரசானது உலக நாடுகளிடையே சமாதான ஒத்துழைப்பையும் சகவாழ்வையும் பெருக்கவேண்டுமென்பதுடன், உலக சமாதானத்தைப் பேணிக்காத்தற்கு நேரடியான ஒரு சக்தியாக நடுநிலைமைக் கொள்கையொன்றைப் பின்பற்றலும் வேண்டும்.

பகுதி VIII

ஜனுதிபதி:

61. ஜனுதிபதியானவர் ஆட்சியின் அரசியலமைப்புத் தலைவராக விளங்குவார் என்பதுடன், குடியரசின் எல்லா நிர்வாக நடவடிக்கைகளும் ஜனுதிபதியின் பெயரால் எடுக்கப்பட்டனவாகவே சொல்லப்படும்.

62. ஆயுதப் படைகளின் தலைமைத்தளபதியாகஜனுதிபதியே இருப்பார் என்பதுடன் தலைமைத் தளபதியென்றமுறையில் அவரது அம்மாநிலத்தின் வேட்பாளர் ஜனுதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து பத்தாண்டு காலத்திற்கு அம்மாநிலம் ஜனுதிபதிப்பதவிக்கு வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் உரிமையை இழத்தல் வேண்டும். 64ஆம் உறுப்புரையின்கீழான ஜ திபதிப் பதவிக்கான நியமனம், இப்பத்தாண்டு காலத்தில் குறுக்கிடலாகாது.

66 ஜனுதிபதியானவர் ஈராண்டுக்காலமொன்றிற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

67. ஒரு துணை ஜனுதிபதியும் இருத்தல்வேண்டும் என்பதுடன். ஜனுதிபதியைத் தெரிவுசெய்யும் அதே தேர்தல் வாக்காண்மைக்குழாத்தினுல் அவரும் தெரிவுசெய்யப்படுவார் அவர் தெரிவு செய்யப்படுவதற்கு, அளிக்கப்பட்ட மொத்தவாக்குகளில் பூரண பெரும்பான்மையான வாக்குகளைப்பெறுதல் வேண்டும். துணை ஜனுதிபதியானவர் மாநிலங்களினுல் நியமிக்கப்பட்ட வேட்பாளர்களிலிருந்து தெரிவுசெய்யப்படல்வேண்டும். ஜனுதிபதியானவர் எம்மாநிலத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டாரோ, அம்மாநிலத்தைச் சேராதவராகத் துணைஜனுதிபதி இருப்பதை நிச்சயப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படல்வேண்டும்.

68. துணைஜனுதிபதியானவர் இரண்டாண்டுகாலமொன்றிற்குப் பதவிவகிப்பார்.

69 ஜனுதிபதியானவர் அரசாங்க பீடத்திற்கு வெளியே இருக்கும் வேளைகளில் அல்லது ஜனுதிபதிப் பதவி வெற்றிடமாகவிருக்கும்வேளைகளில், துணை ஜனுதிபதியானவர், ஜனுதிபதி அரசாங்கபீடத்திற்கு திரும்பும் வரையிலும் அல்லது ஜனுதிபதிப் பதவி நிரப்பப்படும் வரையிலும், ஜனுதிபதிக்காகப் பணியாற்றுதல் வேண்டும். து ஜனுதிபதியும்இல்லாத வேளையில், மத்திய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களில் ஒருவர் அரசாங்கத்தை நிருவகித்தல் வேண்டும்.

70. மத்தியசட்டமன்றத்திற்கு அல்லது மாநிலங்களின் ஆட்சிமன்றங்களுக்குத் தெரிவுசெய்யப் பெறத்தகைமையுடைய ஆட்கள் ஜனுதிபதியாகவோ துணைஜனுதிபதியாகவோ தெரிவு செய்யப்பெறத் தகைமையுடையோராவர்.

71. குடியரசின் விவகாரங்கள்பற்றியும் மாநில அரசுகளின் விவகாரங்கள் பற்றியும் தகவல்பெற ஜனுதிபதி உரிமையுடையவராதல் வேண்டும்.

72. ஜனுதிபதியானவர்'-

[அ] குடியரசின் பிரதம அமைச்சரையும் அமைச்சர் பாராளுமன்றத்தை கூட்டவும், கூட்டத் தொடரை முடிக்கவும்கலைக்கவும் உள்ள அதிகாரத்தையும்;

[ஆ] பாராளுமன்றம் அ[illegible]ஞமின்மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக, அறிக்கைகளையும் கூற்றுக்களையும் பாராளுமன்றத்தின்முன் வைக்குமாறு செய்விக்கும் அதிகாரத்தையும்;

[இ] அரசியலமைப்புத் தொடர்பிலான ஏதேனும் பிரச்னையை மத்திய மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஆற்றும்படுத்தும் அதிகாரத்தையும்;

[ஈ] இயற்றப்பட்ட சட்டங்களுக்கு அங்கீகாரமளிக்கும் அதிகாரத்தையும்;

[உ] மத்தியசட்டமன்றத்தின் இருசபைகளிலெதனுக்கும் மாநிலங்களின் ஆட்சிமன்றங்களுக்கும் உரையாற்றும் உரிமையையும், செய்திகள் விடுக்கும் உரிமையையும், உள்ளடக்குவன.

(தொடரும்)

......

## சந்தேகநபர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை எதுவும் நடைபெறவில்லை.

நேற்றுக்காலை கொடிகாமத்திற்கருகாமையிலுள்ள போக்கன் என்ற கிராமத்தில், பருத்தித்துறையிலிருந்து பிரயாணிகளுடன்வந்த வானை ஒரு கோஷ்டியினர் மறித்து தாக்கியதை தொடர்ந்து பிரயாணிகளும் சாரதியும் காயமடைந்தனர் இச்சம்பவத்தையொட்டி சாவகச்சேரி பொலிஸார் 12 சந்தேகநபர்களை கைது செய்தனர் விசாரணைக்காக இரு கார்களையும் பொலிஸார் கைப்பற்றினுர்கள். இச்சம்பவத்தையொட்டி பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

......

## தகப்பனுர ஏசியதால் மகன்தற்கொலை

யாழ்ப்பாணம், புதன் தாமோதரன் குலேந்திரன் (26) என்னும் இளைஞர் நித்திரைக்குளிகை மருந்தை அருந்தி தற்கொலை செய்து கொண்டார் தகப்பனுர்ஏசியதால் மனமுடைந்த இவர் குளிகையை விழுங்கியதாக விசாரணையில் தெரியவந்தது மரணவிசாரணை நடத்திய கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி மூ. யோகலிங்கம் ஜே. பி. தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# லயத்தில் இருக்கலாம்

## மசோதா நிறைவேறியது

கொழும்பு, திங்கள் வேலைநீக்கஞ் செய்யப்படும் தோட்டத் தொழிலாளர்கள் அவர்கள் வசித்து வந்த லயத்திலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்றிருந்த சட்டத்தை மாற்றியமைக்க மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேறியது தோட்டத் தொழிலாளி ஒருவர் வேலையிலிருந்து நீங்கிய பின்னரும் அதே லயத்தில் தொடர்ந்து சிவித்துவர இந்த மசோதா வழிவகுக்கிறது. தோட்டத் தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மசோதாவைச் சமர்ப்பித்தார்

வடக்கில் பல்கலைக்கழகம்

# கொழும்பில் இன்று மாநாடு

யாழ்ப்பாணம். புதன் வடக்கில் பல்கலைக்கழகம் அமைப்பதுபற்றிய ஆலோசனை மகாநாடு இன்று கொழும்பில் நடைபெறவிருக்கிறது, தபால்தந்தி அமைச்சர் திரு செ குமாரசூரியர் இம்மகாநாட்டைக் கூட்டியுள்ளார்,

இம் மகாநாட்டிற்கு வடபகுதியைச் சேர்ந்த பலபிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் வடபகுதியில் எவ்விடத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்றும் எவ்வகையானபல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்றும் இம் மகாநாட்டில் ஆலோசனை கூறப்படுமென தெரியவருகிறது!

இம் மகாநாட்டில் ஊர்காவற்றுறை சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு ப. கதிரவேலு சாவகச்சேரி சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு இராமலிங்கம் மற்றும் வடபகுதிசுதந்திரக்கட்சிஅமைப்பாளர்களும் கலந்து கொள்வார்கள்.

தபால் அமைச்சர் இம் மகாநாட்டில் தெரிவிக்கப்படும் ஆலோசனைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பார் எனத் தெரியவருகிறது,



கூட்டுறவாளரும் பிரபல சமூக சேவையாளருமான திரு. ஏ. ரி. வேதாரணம் அவர்கள் மறைந்த செய்தி கூட்டுறவாளர்களுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது

இவர்வலிமேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்க சமாஜத்தில் 22 வருடகாலம் தலைவராக கடமையாற்றியதோடு யாழ்ப்பாண கல்லூரி ஆரம்ப பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இவரது மறைவு குறித்து வலிமேற்கு கூட்டுறவு சமாசமும், நெசவு நிலையமும் நேற்று மூடப்பட்டன. வட்டுக்கோட்டையில் நேற்று நடந்த மரணச்சடங்கில், கூட்டுறவாளர்கள் உட்பட ஏராளமானேர் கலந்துகொண்டனர்.

—ஓர் அன்பர்

## இரு மசோதா மீது இன்று விவாதம்

கொழும்பு. செவ் கட்டாய சேமிப்புச்சட்டத்துக்கான மசோதாவும் தொழில்களை அரசாங்கம் ஏற்கும் மசோதாவும்இன்று ஆட்சிமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

## வர்த்தக . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் கௌரவப் பிரஜைகளிடமும், தற்காலிக வாசகால பர்மிட்டுள்ளவர்களிடமுமே இருந்து வந்திருக்கின்றது. அவர்கள் நாட்டுமக்களின் நலன்கருதி உழைக்கவில்லை. கூட்டுத்தாபனம் ஆகும் தனியார் ஸ்தாபனங்களில் கடமையாற்றும்ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும் அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் அமைச்சர் சொன்னுர்.

ந்த மசோதாமீது எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில் இம் மசோதாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிமன்றத்திலும் செனட்டிலும் பூரண ஆதரவைத் தரும் என்றுர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org